விலை 16 காசு.

அறப்போர்
வார இதழ்

ஆசிரியர் : அரங்கண்ணல்

ஒளி: 1, | சென்னை திருவள்ளுவர் ஆண்டு. 1992, கார்த்திகை 9 வெள்ளி 24-11-61 | கதிர்: 39

அதுதான்காதல்!

கடிதத்தைக் கண்டதும் திகைத்து விட்டேன். கானம் பாடும் வானம்பாடியைப் போலிருந்த என் வாழ்க்கையில் கருங்குரங்கு குறுக்கிடுவதாக எண்ணினேன். என்னையறியாமலேயே

எனக்கு வரப்போகும் 'மனைவி' யின்மீது வெறுப்பும் கோபமும் வளர்ந்தது. என்னதான் அவள் அழகியாயிருந்தாலும் 'என் ரமா ஆவாளா? வகுப்பறையில் ரமா வரும்போது அழகு ஆடிவருவது போலிருக்குமே!

"மிஸ்டர் இளங்கோ!" என்று கூப்பிடும்போது குயில் கூவுவது போலிருக்குமே! ரமா எங்கே? எனக்காகப் பார்த்திருப்பதாகக் கடிதத்தில் அப்பா எழுதியிருக்கும் காந்தா எங்கே?

நேற்றுத்தான் ரமாவுடன் நெருங்கிப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது நெஞ்சத்து நெகிழ்ச்சிகளையெல்லாம் மொண்டு மொண்டு அவளிடம் கொட்ட எண்ணினேன். நீயா வந்து

ஆஸ்டலுக்குப் போக!" என்று சொல்லி. எப்படியாவது இன்றைய தினம் என் காதலைக் கொட்டிவிட வேண்டும் என்று இருக்கிறேன். இப்போது வருகிறது கடிதம், "உடனே புறப்பட்டு வா. அம்மா விருப்பப்படி பெண் நிச்சயம் செய்துவிட்டேன், கலியாண தேதியும் குறித்துவிட்டனேன்" என்று.

வரமுடியாது என்று சொன்னால் படுக்கையில் பல மாதங்களாய் நோயால் கிடக்கும் அம்மாவின் உயிர் போனாலும் போய்விடும்; ஏ

அப்பா! அதைவிட கொடுமை வேண்டாம். என் தந்தையோ, என் மீது உயிரையே வைத்திருப்பவர். என்ன செய்வது? இரயிலுக்குக் கிளம்புவதா! பெண்கள் உலாவரும் "போட் கிளப்" பக்கம் போவதா!! எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

நல்ல தமிழைப் படித்துக் கொண்டிருக்கும் போது நாலு சமஸ்கிருதச் சொல் புகுந்தால் எப்படியிருக்கும்? கதாநாயகனும் கதாநாயகியும் பேசிக் கொண்டி

ருக்கும் கட்டத்தை நாவலில் படித்துக் கொண்டிருக்கும்போது 'காலிங் பெல்' அடித்தால் எப்படியிருக்கும்?

கடிதத்தை மேசையின்மீது

வைத்துவிட்டு உட்கார்ந்தஎனக்கு

போதுதான் இரயிலுக்கு இன்னும் அரைமணி நேரம் இருப்பது புரிந்தது.

காதலா! கடமையா!! எது எனக்கு முக்கியம்? என்னால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை.

"சரி! ஊருக்குப்போய்ஏதாவது சாக்குச் சொல்லி இந்த ஆபத்திலிருந்து தப்பலாம்" என்று கிளம்பினேன். என்ன ஆச்சரியம்! என் ரமாவும் ரயிலடிக்கு வந்து வண்டியில் இறங்குகிறாள்? ஒருவேளை விஷயம் தெரிந்து என்னைச் சந்திக்க ஓடி வருகிறாளா? செச்சே! இன்னம் 'விருப்பத்தையே' அவளிடம் நாம் சொல்லவில்லையே? பிறகு அவளும் ஏன் வருகிறாள்? அவள் அப்பாவிடமிருந்து அவசரமாகப்புறப்பட்டுவரச் சொன்னதாக அவளுக்குக் கடிதம் வந்ததாம்!

கதைகளில் படிப்போமே அதுபோல ஒருவேளை ரமாவையே எனக்கு நிச்சயம் செய்திருப்பார்களோ? செச்சே! எனக்குப் பார்த்திருக்கிற பெண்ணின் பெயர் காந்தா என்று அப்பாவே எழுதியிருக்கிறாரே. கழுத்தில் மாலையை எடுத்துப் போடப்போகும்போது ரமாவே காந்தாவாகவே இருந்தால்? என் மனைவி பாக்கியசாலி

யாயிருக்க முடியும் அப்படி நடக்குமா—செச்சே! என்ன பைத்தியக்காரத்தனம் வாழ்க்கை யென்பது கற்பனையின்

கூத்தா! கதைகளில் வரும் எழுத்தா!!—இல்லையே?

* *

என்னுடைய முடிவைச் சொல்லும்போது அப்பா மூர்ச்சித்து விழுந்துவிடுவாரென்றே எதிர்பார்த்தேன். என் தந்தை பழமையில் ஊறியவர். அவரின் பிடியிலிருந்து விலக எனக்கு வேறு வழிதெரியவில்லை, எப்படியாவது இந்தக் கலியாணத்தை ஒத்திப்போட வேண்டும் என்பதுதானே என்

கேட்டீரா சேதி!

நவம்பர் 15ந்தேதி பாட்னுவில் நடக்கவிருக்கிற காங்கிரஸ் மாநாட்டுக்கு வேண்டிய நிலக்கரியையெல்லாம் தாங்கள் இனமாகக் கொடுப்பதாக பீகாரிலுள்ள சில சுரங்க அதிபர்கள் தெரிவித்திருப்பதாக பீகார் முதலமைச்சர் வெளியிட்டிருக்கிருர்!

* * *

சிதம்பரத்துக் கருகிலிருக்கும் கிராமத்தைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ்காரர் பண்டித நேரு அவர்கள் அமெரிக்காவிலிருந்த போது கோயில் பிரசாதம் வாங்கி அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்திருக்கிருர்!!

* * *

ஐகோர்ட் ஜட்ஜ் கேஸ் போட்டிருக்கிருர்! ஆமாம் இந்த ஆச்சரியமான வழக்கு பஞ்சாப் உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜோதி பிரக்காஷ்மித்தர் என்பவர் கல்கத்தா உயர்நீதிமன்றத்து நீதிபதி ஆவார், அவருடைய பதவி காலம் 1961 டிசம்பரோடு முடிவடைவதாகச் சர்க்கார் தெரிவித்திருக்கிருர்கள். இல்லை! இல்லை! எனக்குரிடையர்டு ஆகும் வயது 1964ல்தான் வருகிறது—என்னுடைய எஸ். எஸ். எல். சி. சர்டிபிகேட் புத்தகத்திலுள்ள வயது பொய்—நான் கெட்டிக்காரனுயிருந்ததால் சீக்கிரம் எஸ். எஸ். எல். சிக்கு போனேன்—வயது கொஞ்சமாயிருந்ததால் பரீட்சைக்கு அனுமதிக்க மாட்டார்களெனச் சொல்லி பொய்வயதாக மூன்று வயதைச் சேர்க்க நேர்ந்தது—அதை வைத்துச்சர்க்கார் இப்போது என்னை ஓய்வு பெறச் சொல்வது தவறு—சட்டபடி இது சரியல்ல என்று கேஸ் போட்டிருக்கிருர்!!

* * *

மேற்கு பெர்லினை சேர்ந்த 1500 இளைஞர்கள் பெர்லின்மாநகரை இரண்டாகப் பிரிக்கும் சுவற்றை தகர்த்தெரியும் எண்ணத்துடன் அணிவகுத்துச்சென்றனர்.

அந்த இளைஞர்படையை போலீசார் தடுக்க, அவர்கள் கல்லெறிய, இதனல் கிழக்கு பெர்லினைச் சேர்ந்தகம்யூனிசுடுகள் கண்ணீர்ப் புகை குண்டு வீச, மேற்கு ஜெர்மனி போலீசாரும் கண்ணீர் புகை குண்டு வீசினர்கள்,

—0—0—

கோவை
தேர்தல் தி. மு. க. சிறப்பு மாநாடு

டிசம்பர் திங்கள் 16, 17 நாட்களில் நடைபெறும்

திறப்பாளர்:	மாநாட்டுத் தலைவர்:
நாவலர்	அறிஞர்
நெடுஞ்செழியன்	**அண்ணு**

கலைக் கண்காட்சித் திறப்பாளர்:

என். வி. நடராசன்

வரவேற்புக்குழுத் தலைவர்:	பொருளாளர்:
ப. நாராயணன்	மு. கருணநிதி

செயலாளர்கள்: எஸ். ஏ. இராசமாணிக்கம், தேவசகாயம்

தொண்டர்படைத் தலைவர்கள்:
ப. கோபாலன், திருப்பூர் துரைசாமி.

ஊர்வலம் நடைபெறும்.
இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

கடைகள் ஏல அறிவிப்பு

டிசம்பர் 16. 17 தேதிகளில் கோவை சிதம்பரம் பூங்காவில் நடைபெறும் மேற்கண்ட மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு உணவு சிற்றுண்டி, இதர வசதிகளுக்காக கீழ்கண்ட கடைகள் 26—11—61 ஞாயிற்றுக்கழமை காலை 10 மணிக்கு சிதம்பரம் பூங்காவிலுள்ள மாநாட்டு அலுவலகத்தில் ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகளை மாநாட்டு அலுவலகத்திற்கு நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம்.

கடைகள் விபரம்

சைவ உணவு விடுதி
பிரியாணி கடை—1
புரோட்டா, டீ மட்டும் உள்ள கடை—1
பஜ்ஜி, போண்டா, வடை உள்ள டீ கடை—2
பால், பால்கோவா கடை—1
பட்டை சாதம் கடை—1
வெற்றிலை பாக்கு, பீடா, பீடி, சிகரெட் (பழம் இல்லாமல்) கடை—2
ரொட்டி, பிஸ்கட் கடை—2
சோடா, கலர் கடை—2
கழக சம்பந்தப்பட்ட புத்தகங்கள் படங்கள் கடை—5
கைத்தறி துணிக்கடை—1
வறுகடலைக் கடை—1
பழககடை (எல்லாவித பழங்களும்)—2
பழரசம் கடை—1
பிளாஸ்டிக்கடை—2
பருப்பிக் கடை—1
சலூன்—1
லாண்டரி—1
சைகிள் ஸ்டாண்டு—1

எம். எஸ். தேவசகாயம்.
எஸ். ஏ. இராசமாணிக்கம்
செயலாளர்கள்.

* * *

ஆசிரியருக்குக் கடிதங்கள்

புதுச்சேரி,
21—11—61

ஆசிரியர் அவர்கட்கு,

தங்கள் 'அறப்போர்' இதழ்களை 'இனமொழி கறபீர்' பகுதி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து படித்து வருபவன் நான். அப்பகுதி கட்சி வேறுபாடற்று தமிழர்கள் அனைவருக்குமே பன்மொழிப் புலவர்களாகத் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

சென்ற 17—11—61 ந் தேதி இதழில் கேள்வி பதில் பகுதியில் நண்பர் ஆ. மைககேல், சிலுவையில் அறையபட்டபோது இயேசு கிருஸ்து அவர்களின் வயதென்ன என்று அவரே அறியாமல் தங்களைக் கேட்டிருப்பது வியப்பாக இருக்கிறது' ஒருவேளை தங்களை பரிட்சீக்க அவ்வாறு கேட்டாரோ என்னவோ? எப்படியிருப்பினும் தாங்கள் அக்கேள்விக்குத் தந்துள்ள பதில் தவருனதாகும்.

இயேசு தாமே அப்போது ஏறக்குறைய முப்பது வயதை அடைந்திருந்தார், என்று புனித லூக்காஸ் எழுதிய சுவிசேஷத்தில் (3 : 23) காணப்பட்டுள்ளது. அதில் 'அப்போது' என்பது அவர் தன் வெளியரங்க வாழ்க்கையை ஆரம்பித்த காடிததைக் குறிக்கின்றது. அவ்வெளியரங்க வாழ்க்கை ஆராய்ச்சியாளர்கள் கருத்துப்படி 3 ஆண்டுகள் நீடித்துள்ளது. ஆகவே '30' என்பது தவருன வயதாகும். பொதுவாக கொண்டுள்ள கழித்து 33 வயதாகும்.

இங்ஙணம்,
அ. லாரன்சு.

ஃ ஃ ஃ

ஆசிரியர் அவர்களுக்கு,
வணக்கம் பல.

தாங்கள் 27—10—61 ஆம் நாளிட்ட சிழமை இதழும், 3—11—61 ஆம்நாளிட்ட கிழமை இதழும் படித்து பரவசம் அடைந்தேன். ஏனெனில் தாங்கள் எழுதிய (27—10—61) 'ஓரணு நூல்' என்ற கதை, இன்றைய சமுதாயத்தில் எந்த முறையில் பார்ப்பனர்கள் நடந்து வருகிருர்கள் என்பதையும். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற மனப்பான்மையையும், தெள்ளத் தெளிவாக எழுதியிருந்தீர்கள். எப்படி தாழ்ந்தவர்கள் மிக பாதிக்கப்பட்டு வாழ்க்கையை வளமாக்க மாறுவேடம் போடவேண்டிய சூழ்நிலையையும், எந்த மனித அவர்களை விரட்டியடித்தார்களோ; அவர்களே, அவருடைய காலடியில் வீழ்கிருர்கள் என்பதை படித்தவுடன் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

அன்புள்ள தம்பி,
இரா. அன்புமணி

இப்போக்கு எத்தனை நாளைக்கு!

'பாட்டாளி மக்களே! இரவைப் பகலாக்கி உழைத்து என்ன பலன் கண்டீர்? ஏற்றங் கொண்டோர் இருக்கின்ற வகை பாரீர்! எற்றுக்கு நாம் பிறந்தோம்? கொத்தடிமைகொண்டு குடும்பத்தோடு வதையவா? வாடா மலராக அவர்தம் வாழ்வு இருப்பானேன்? வறுமையும் சோகமும் நம்மை வாட்டுவானேன்? இந்த ஏற்றத் தாழ்வு ஏன? இதற்கொரு முடிவில்லையா?'' என்று கேட்டு, ஏழையும் இல்லாதவனும், சுரண்டப்படுபவனும் சுரண்டப்படாதவனும் இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்கவேண்டுமெனும் கொள்கைக்கே சோஷியலிசம் என்று பெயர்!!

*

"ஓ! என் தோழரே. என் கையில் ஆட்சி வரட்டும். இப்படியெல்லாம் உங்களை விட்டுவைப்பேனு. உங்களை மந்திரிகளாக்குவேன்! பெரிய அதிகாரிகளாக்குவேன்! துப்பாக்கிகளை எடுத்து உங்கள் கையில் கொடுப்பேன்! பிறகு நீங்கள்தான் எல்லாம்! காண்டிராக்ட் வேலை உமக்கு—இன்சினீயரும் நீரே—எல்லா பதவியும் உமக்கே. இதை உணர்ந்து எப்படியாவது, என்னை, இந்நாட்டின் ஆள்வோனுக ஆக்குங்கள். அதற்குப் பிறகு பாருங்கள்!''—என்று அறைகூவல் விடுத்து, தனக்குத்துணை நின்றவர்களின் கையில் துரைத்தனத்தைத் தூக்கிக்கொடுத்து, பழைய அதிகார பீட அதிபதிகளை அகற்றி, நான் வைத்ததே சட்டம், அந்த சட்டத்தை அமுலாக்க எனக்கு வேண்டியவர்கள் உண்டு, என்று ஆட்டம் போடும் போக்குக்கு பாசிசம் நாஜிசம் என்று பெயர்!!

* * *

மார்க்சும் லெனினும் சோஷியசம் காண முயன்றனர்.

இட்லரும் முசோலினியும் நாஜிசமும் பாசிசமும்தழைக்கப் பாடுபட்டனர்.

ஜாரின் தலை உருண்ட ரஷியாவில், பிரபுக் குலத்தின் பிடரியில் தட்டி, பொருளாதார சமத்துவம் உண்டுபண்ண லெனினும் ஸ்டாலினும், புது வழிகளைக் கண்டனர்.

குடியரசு எனும் பெயரில் உருவான ஜெர்மனியிலும் இத்தாலியிலும், பொருளாதார சமத்துவம் பற்றிய எண்ணம் காற்றில்விடப்பட்டு, தாசர்களைத் தயாரித்து தர்பார் நடத்தும் எண்ணம் தலைவிரித்தாடிற்று.

ஐந்தாண்டுத் திட்டங்கள்—பெரிய பெரிய நிலப்பண்ணைகள் விவசாயிகளுக்காகப்படல்—ஆலைகள் அமைத்தல் — சாலைகள் உண்டுபண்ணுதல்— போன்ற ஆக்கவேலைகள், ரஷியாவில் துவங்கப்பட்டன.

அவனை எப்படிச் சாய்க்கலாம்—இவனை எப்படி வலை போட்டுப் பிடிக்கலாம்—நம்மைக் கண்டு இன்னெருவனை எபபடி நடுங்கும்படிச் செய்யலாம்—அப்படி நடுங்கவைப்பதற்கு எப்படியெப்படி இராணுவங்களைக் குவிக்கலாம்—அந்த இராணுவத்திற்குத் தேவையான புதிதுபுதிதான ஆயுதங்களை எவ்விதம் செய்யலாம்—என்கிற வழிகளே இட்லராலும் முசோலினியாலும் தூண்டப்பட்டன.

பூமியைச் 'சொர்க்கலோக' மாக்கும் வழியில் சோஷியலிச அரசு முயன்றது.

'நரகமாக்க' என்ன செய்யலாம் என்று நாஜிச பாசிச அரசுகள் பாடுபட்டன.

மக்களை வைத்து சோஷியலிசம் தன்பாதையை வகுத்தது.

தங்களை வைத்து, இட்லரும் முசோலினியும், தன்னுட்டை வளர்த்தனர்.

* * *

இரண்டில் எது நன்மையை உண்டு பண்ணிற்று என்று நாம் விளக்கவேண்டியதில்லை!!

எப்போதும் பொது நன்மையை மனதிலெண்ணி வகுக்கப்படும் அரசியல் முறைகளாலும்—பெரிய தலைவர்களாலும்—நாட்டுக்கோ மக்களுக்கோ, ஆபத்துக்கள் வருவதில்லை.

சுயநலத்துக்காகவே பழைய ஆட்சியை ஒழித்தோம், பங்கு போட்டுக்கொண்டு வாழவே புதிய ஆட்சி உருவாக்கினேம் என்று கருதும் கட்சிகளாலும் தலைவர்களாலும், நாடு உருப்பெறுதல் எளிதல்ல.

இந்தியத் துணைக்கண்டத்துக்குச் சுதந்திரம் வாங்கப் போராடிய காலத்தில், காந்தி, நேரு போன்ற உத்தமர்கள், எல்லோருக்கும் நீதி கிடைக்கக்கூடிய இன்ப ராஜ்யம் அமைக்கப்போவதாகவே சொல்லினர்.

சுதந்திரம் கிடைத்ததும், இன்பம் தமக்கும் தமக்கு வேண்டியவர்களுக்கு மிருந்துவிட்டால் போதும் என்று எண்ணி நடக்கலாயினர்—நேரு, காமராஜர்கள்.

இன்றைய தினம் பற்பல மேதாவிகளும், புத்திசாலிகளும் அரசியல் தொடர்பற்று, இருந்த உத்தியோகங்களைக்கூட விட்டுவிட்டு எங்கெங்கோ போய்விட்டதற்குக் காரணம் காங்கிரசுக்காரர்களாகும்.

ரஷியாவைப்போல மக்களின் பொருளாதார பேதத்தைச் சமனிடும் சரியான வழிகளைக் காணுவதில், நேரு குழாம் முயற்சிக்கவில்லை.

கிடைத்த சுதந்திரத்தை எப்படியெப்படி தமக்குள் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்கிற பாசிசப் போக்கே இடம் பிடித்தது.

விசயலட்சுமியாரா—என் அக்கா அவர்! கொடு ஒரு பதவி. ராதாகிருஷ்ணனு, காசி சர்வகலாசாலையிலிருந்தபோது எனக்கு வேண்டியவர், அனுப்பு ரஷியாவுக்கு—ஆச்சாரியா கிருபளானியா? அவர் தகருறுப் பேர்வழி! அவருக்கு எதுவும் வேண்டாம்—சர். சி. பி. இராமனு; அவர் காங்கிரசுக்கு எதுவும் செய்ததில்லை; அதனுல்; நமக்கு வேண்டிய ஆளைப்போட்டு உபசரிப்போம்—இப்படி, இலாகாப் பங்கீடுகள் செய்து, அதிகார மாற்றத்தை அனுபவிப்பதிலேயே காலம் கழிந்தது!!

உலகம் முழுமைக்கும் அனுப்பப்பட்டிருக்கும் அம்பாசடர்களையும்—நேரு சர்க்காரின் மந்திரி சபையிலிருக்கும் 40-க்கும் மேற்பட்ட மந்திரி—துணைமந்திரி—துணைக்குத்துணை மந்திரி ஆகியவர்களையும் பட்டியல் எழுதிப்பார்த்தால் இது விளங்கும்.

நாஜிசம் பாசிசம் ஆகியவைகளின் அடுத்த 'இலக்கணம்' ஒரு முடிவைச் சொல்லிவிட்டு, அதற்குத் தேவையான புள்ளி விபரங்களையும், பொய்ந் கதைகளையும் தயாரித்துத் தருவதாகும்! அதாவது, மக்கள் எல்லோருடைய மன ஒப்புதலையும் பெருமல், தாங்களே காரியங்களைச் செய்வதாகும்!!

* * *

ஜனநாயக வழியில், பத்தாயிரம் துப்பாக்கிகள் செய்ய வேண்டுமென்ருல், முதலில் அதற்கான காரணங்கள் அலசப்படும்—இந்த ஊரோடு போர், இதற்காகத் தேவை என்று விளக்கப்படும்.

*

பாசிச வழியில், முதலில் துப்பாக்கிகளைச் செய்யச் சொல்லிவிட்டு, ஓகோ! துப்பாக்கிகளைச் செய்துவிட்டோமா—சரி, காரணம் வேண்டுமே—புகுந்து தாக்கு அடுத்த நாட்டை, அதற்காகத்தான் செய்யச் சொன்னதாக இருக்கட்டும், என்ற போக்கில் காரியங்கள் நடக்கும்.

*

ரஷ்ய வழியில், பத்தாயிரம் துப்பாக்கிகள் செய்யப்படுவதற்கு முன் அனுமதியோ முன்னறிவிப்போ இல்லாமல் இரகசியமாகச் செய்யப்பட்டு, தயாராகவைக்கப்பட்டிருக்கும்.

ஃ ஃ ஃ

இந்த மூன்று 'வழி'களிலும் ஆளும் அரசு, எதையும் மக்களிடம் தெரிவித்து, அவர்தம் மனக்கருத்தை யறிந்து, அதன்படிச் செயல்பட வேண்டுமென்கிற கொள்கையே உகந்தது—அதுதான் ஜனநாயக முறை என்று எல்லோரும் கருதுகிருர்கள்.

மக்களே நாட்டின் மகேசர்கள்! அவர்களுக்காகவே நாடே ஒழிய, ஒருசிலருக்காக நாடு அல்ல என்பதை நாமும் ஆமோதிப்பவர்களாதலால், 'ஜனநாயக' முறையே நல்லதென்று சொல்லுகிறேம்.

அதனுலேயே தங்களது சர்க்காரும் ஜனநாயக முறைப்படி நடப்பதாகக் காங்கிரஸ்காரர்கள் பீத்தித் திரிகிருர்கள். ஆனுல், உண்மையில், அவர்கள் போக்கு ஜனநாயகமா! பாசிசமா!! என்ருல், நன்ருக விளங்கும்.

* கிடைத்தச் சுதந்திரம் தங்களைச் சேர்ந்தவர்களுக்குப் பதவிகளைப் பங்கிட்டுக்கொள்ள என்று நினைக்கிருர்களே ஒழிய, புத்திசாலிகளுக்கு இடமளிப்பதில்லை.

* தாங்களாகவேகூடி ஒரு முடிவை எடுத்துவிட்டு, எல்லோர் மீதும் சுமத்துகிருர்களே ஒழிய சன சமூகத்தில் மதிக்கப்படும் பிற அரசியல்கட்சிகளின் கருத்துக்களை மிக அலட்சியமாக மதிக்கிருர்கள்!

நான் பாம்பு என்று வெளிக்குக் காட்டிக் கொள்கிறவனைவிட நான் பாம்பல்ல என்று வேடமிட்டுக்கொண்டே 'விஷத்தை'க் கொட்டுகிறவன் வஞ்சகன்; அந்த வஞ்சகனைவிட மோசமானவன், நான் பால்தரும் பசு என்று சொல்லிக்கொண்டு பாலைப் போல நஞ்சைக் கொடுக்கிற நயவஞ்சகன்!!

நாஜிச பாசிச வாதிகள் அல்ல என்று காங்கிரஸ்காரர்கள் சொல்கிருர்கள்—சோஷியலிச ஜனநாயக வாதிகள் நாங்கள்,—'மாதிரி சோஷியலிசம்' என்று சொல்லிக் கொள்கிருர்கள்—அதேசமயம், இட்லரும் முசோலினியும் என்ன வழியில் சென்ருர்களோ, அதே வழியில்தான் செல்கிருர்கள்!!

இட்லருக்கும் முசோலினிக்கும் முன்பு இருந்தான், பிரெஞ்சு நாட்டு நெபோலியன்.

அவன் ஒரு சர்வாதிகாரி! அப்படிச் சொல்லிக்கொள்ள அவன் தயங்கியதில்லை!! 'சக்ரவர்த்தி'

(4-ம் பக்கம் பார்க்க)

இதோ ஒரு சஞ்சீவி
கால் ஆணிக்கு
(மேல் பூச்சு மருந்து)
காலில் குழி விழுந்தும், சதை வளர்ந்து முற்றியும் நடக்க முடியாமல் வருந்துபவர்களுக்கு நிச்சயநிவாரணி
விலைதபால்செலவுடன் 4-25
வாணி புக் டிபோ,
3, மலையபெருமாள் தெரு,
சென்னை-1.

குருஷ்சேவின் கூத்து!

'இராணுவ மேதை ஸ்டாலின்! தலைசிறந்த மார்க்சிஸ்ட்! தவறுகளே செய்யாதவர்! லெனினிசத்தின் வாரிசு! புத்துலகச் சிற்பி!' என்றெல்லாம் ஏற்றிப்போற்றப்பட்ட ஸ்டாலின், இன்று சோவியத் நாட்டின் அவமானச் சின்னமானார்! அவரது சடலம்கூட மாஸ்கோ சமாதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. சோவியத் பி தமர் குருஷ்சேவ், ஸ்டாலின் நினைவையே மக்கள் மனத்தினின்று அகற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்· 'குருஷ்சேவின்

சோ. ர.

ஸ்டாலின் ஒழிப்பு இயக்கம்' மிகவும் தீவிரமாக செயல்பட்டு வருகிறதென்றும் கேள்விப்படுகிறோம்.

சோவியத் நாட்டில் நான்கு நகரங்களின் பெயர்கள் மாற்றப்பட்டுவிட்டன. 'ஸ்டாலின்கிராடுக்கு' 'வாலோகிராடு' என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஆங்காங்கே ஸ்டாலின் உருவச் சிலைகள் அகற்றப்படுகின்றன.

ஸ்டாலின் ஒழிப்பு இயக்கம் குருஷ்சேவ் தலைமையில் மேற்கண்ட நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது கண்டு மக்கள் மன்றம் திடுக்கிடாவிட்டாலும் இதற்கு முன் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் கூட்டத்தில் ஸ்டாலினைப் பற்றி குருஷ்சேவ் வெளியிட்ட இரகசிய அறிக்கை உலகையே வியப்பில் ஆழ்த்தியது. அன்றே அது பெரும் பரபரப்பை ஏற்படுத்திற்று.

'ஸ்டாலின் முரட்டுக் குணம் படைத்தவர்; தமது தோழர்கள் மீது அன்பு நிறைந்த கண்ணோட்டம் அவருக்கு இல்லை; சபல புத்தி படைத்தவர்! எனவே அவரைக் கட்சிப் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்க வேண்டும்!' என்று 1925-ஆம் ஆண்டில் லெனின் கூறியிருக்கிறார்.'

'ஸ்டாலினுடன் கருத்து மாறுபாடு உள்ளவர்கள் — விரோத எண்ணம் படைத்தவர்களென்று கருதப்பட்டவர்கள் ஸ்டாலினால் கொன்று குவிக்கப்பட்டனர்!'

'கற்பனை வழக்குகள் ஜோடிக்கப்பட்டன! நேர்மையான கம்யூனிஸ்டுகள் என்று தெரிந்தும் சோவியத் பொருளாதார ஊழியர்களுக்கு 'மக்கள் விரோதிகள், என்ற பட்டம் சூட்டப்பட்டு மிருகத்தனமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர் ஸ்டாலினால்!'

'பதினேழாவது காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட 98 பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்!'

'அவதூறான தகவலின் அடிப்படையில் பொலிட் பீரோ உறுப்பினரான எக்கிமீது பொய்க் குற்றம் சாட்டப்பட்டு 1940-ஆம் ஆண்டு பிப்ரவரி 4-ஆம் நாள் சுட்டுக் கொல்லப்பட்டார்!'

'பொய்க் குற்றங்கள் ஜோடிக்கும் வேலை பெரிய அளவில் நடந்தது. பல்லாயிரக்கணக்கான நேர்மையான கம்யூனிஸ்டுகள் பலியானார்கள்!'

'ஸ்டாலினைமட்டும் பெருமைப்படுத்த வேண்டும் என்ற நோக்

கத்துடன் 'பெர்லின் வீழ்ச்சி படம் தயாரிக்கப்பட்டது.'

'சுதந்திரப் போரில் மக்கள் வீடுகளை இழந்து குடிசைகளில் வாழ்ந்த காலத்தில் ஸ்டாலின்' கிராடு பகுதியில் ஸ்டாலின் உருவச் சிலை ஏராளமானப் பணச் செலவில் நிர்மாணிக்கப்பட்டது.'

'லெனின் நினைவை நிலைநிறுத்தும் விஷயத்தில் ஸ்டாலின் சிறிதும் கவனம் செலுத்தவில்லை. 'கல்வித் துறையில் சிறந்தவர்களுக்கு லெனின் பரிசு வழங்க வேண்டும்' என்ற தீர்மானம் இன்று வரையில் செயல்படவில்லை—லெனின் பரிசு ஸ்டாலினால் ஏற்படுத்தப்படவே இல்லை!'

கஸ்டாலின் கரங்கள் இரத்தக் கறை படிந்தவை! அவர் இரக்கமற்ற கல்நெஞ்சர்! மாறுபட்ட கருத்துள்ளவர்கள் மார்பை பிளந்தெறிபவர்!'

இவ்வாறு திடுக்கிடும்படியான தகவல்களை அன்றே குருஷ்சேவ் தனது கட்சிக் கூட்டத்தில் இரகசிய அறிக்கை மூலம் வெளியிட்டுவிட்டார். அந்த இரகசிய அறிக்கை உலகினருக்குத் தெரிந்த பிறகும் சோவியத் கம்யூனிஸ்டு கட்சி எத்தகைய மறுப்பு அறிக்கையும் வெளியிடவில்லை. அண்மையில் கூடிய கட்சியின் 22 வது காங்கிரஸ் கூட்டத்திற்குப் பிறகுகூட 'ஸ்டாலின் ஒழிப்பு இயக்கம்' குருஷ்சேவின் தலைமையில் உருவானது தவிர, ஸ்டாலினை 'பாராட்டுவோர் தொகை வளரவில்லை.

ரஷ்யாவை உலகின் பலமிக்க ஒரு வல்லரசாக உருவாக்கிய ஸ்டாலின், 1953-ல் அவர்தம் இறப்புக்குப் பின்னர்— அன்று அவர் இழைத்த கொடுமைகளைச் சுட்டிக் காட்டியதோடு விட்டிருக்கலாம். 'சடலம் அகற்றப்பட்டு, புதைக்கப்படுதல்—பெயர் மாற்றம்—பெயர் அழிப்பு — சிலை ஒழிப்பு' போன்றவைகள் வேண்டாத செயல் என்றே கூற முடியும். அதற்கொப்ப உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் 'குருஷ்சேவின் ஸ்டாலின் ஒழிப்பு இயக்கத்'தைக் கண்டித்து இறந்த ஸ்டாலினுக்குத் தங்கள் ஆதரவை தெரிவித்திருக்கின்றனர்.

செத்தவனை பிழைக்க வைத்து மீண்டும் அவனை புதைக்குழிக்குக் கொண்டு செல்வது போலாக்கிவிட்டது, 'குருஷ்சேவின் ஸ்டாலின் ஒழிப்பு இயக்கம்!' அன்றே ஸ்டாலின் கொடுமைகளுக்கு கல்லறை கட்ட முடியாதவர்கள், இன்று, அவர் இறந்தபின் கல்லறையை அழித்து விடுவதனால் ஒழிவிதப் பயனுமில்லை. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த எந்த நினைவுச் சின்னத்தையும் அகற்றுவது பண்பட்டவர்கள் செய்யக் கூடிய காரியமல்ல! ஸ்டாலின் கொடுங்கோலராக இருந்திருக்கலாம்; ஆனால் இன்றைய சோவியத் பெருமைக்கு அவர்தான் காரணமாக விளங்குகிறார். அதை எண்ணியாவது அவருக்கு அவமானத்தை உண்டாக்காமல் இருந்திருக்கலாம்.

இன்று ஸ்டாலினுக்கு இந்த நிலை! நாளை......?

சென்னை 38-வது வட்டம் டாக்டர் பெசன்ட் நகர் மாநகராட்சிக் குடியிருப்புக்கு அருகில்,சமூகநல நிலையத்திற்கு (திருமண கூடம்) 25—11—61 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு
மேயர் திரு வி. முனுசாமி அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா அவர்களால் கால்கோல் விழா நடைபெறும்.

தங்கள் அன்புள்ள,
தி. சு. நல்லதம்பி. எம்.சி

(3—ம் பக்கத் தொடர்ச்சி)

என்றுகூடப் பட்டம் சூட்டிக் கொண்டான்!!

பிறப்பால் அவன் பிரஞ்சுக்காரனல்ல; மத்தியதரைக் கடலிலிருக்கும் கார்சிகா தீவைச் சேர்ந்த இத்தாலியன்.

பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த தன்னுடைய கார்சிகாவை மீட்க வேண்டுமென்பதே சிறுவனாயிருந்தபோது, நெபோலியனுடைய வேட்கையாயிருந்தது. அதனால் இராணுவப் பள்ளியில் பயில்வதற்காகப் பிரான்சுக்குப் போனான்.

பிரெஞ்சு இராணுவப் பள்ளியில் பெரும்பாலும் பிரபுக்களின் புதல்வர்களும், சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளைகளுமே இருந்தனர். அதனால் இவனை மிகமிகச் சாதாரணமாகவே நடத்தினர்!!

அன்று ஏற்பட்ட வஞ்சம், பிரெஞ்சுத் தளகர்த்தனாகிப் படிப்படியாக உயர்ந்து படை பல நடத்திடும் வலிவு பெற்றதும் அந்தப் பிரபுக்களுக்கெல்லாம் பெரிய சக்கரவர்த்தியாக தன்னை ஆக்கிக்கொள்ளச் செய்தது.

தன்னைப்போல் ஏழைகளாகக் கிடந்த எல்லோரையும் உயர்த்தும் பொது நோக்கம் கொள்ளவில்லை, அவன். தான் உயர்ந்தான்.

உடனே தன்னுடைய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மன்னர் பொறுப்பை அளித்தான் இவன் சக்ரவர்த்தியானால், சக்கரவர்த்திக்குக் கட்டுப்பட்ட மன்னர்கள் வேண்டுமல்லவா!!

'டச்சுக்காரர்களே! என் தம்பியை உங்கள் அரசனாக ஏற்றுக் கொள்ளுங்கள்''

'நேபிள்ஸ் நகரத்தோரே! என் அண்ணன் உமக்கு மன்னன்.,

'ஜெர்மனியின் ஒரு பகுதியைத் துண்டித்து மேலப்பாடியா என்றொரு அரசு உண்டுபண்ணியுள்ளேன்! இன்னொரு தம்பியான நீ போய் அங்கே ராஜாவாயிரு...'

'நேபில்சுக்கு மன்னனான அண்ணா! நீதான் ஸ்பெயினுக்கும் மன்னன்...'

'ஏய் தளபதி! எனக்கு வேண்டியவனான நீ, ஸ்வீடனுக்கு அரசன், போ...'

இப்படி ஆட்டம் போட்டான்! ஐரோப்பா முழுவதுமே அவன் காலடியில்!!

கடைசியில், கைதியாகி மாண்டான்.

காங்கிரஸ் 'காமராஜர்கள்' தங்களை சக்கரவர்த்திகள் என்று சொல்லிக்கொள்ளவில்லையே தவிர, அதே பாணியிலேயே நடக்கின்றனர்.

தமது விருப்பம்—ஒரு சட்டம்!
தனக்குப் பிடித்தவன்—ஒரு பதவி!!

தன் கட்சியில் ஒருவன் சேர்ந்தால்—உடன் ஒரு சான்சு!!

இப்படியெல்லாம், இஷ்டம் போல் ஆட்டம் போட்டு வருகின்றனர்.

திடீரென்று, தலையாட்டும் தாசர்களைக் கூப்பிட்டு, 'மாநாடு' தீர்மானம்—என்கின்றனர்.

இந்தப்போக்கு, எத்தனை நாளைக்கு!!—நாம் கேட்கவில்லை, வரலாறு கேட்கிறது.

நான் கண்ட அண்ணா



"சம்பத் வந்த சமயம் நான் 'ஒரு மாதிரியா' இருந்தேங்க! அந்தச் சமயம் வந்து எதிர்பாராத நிலையிலே அண்ணா எழுத முடியாதுங்கிறாநன்னு சொன்னதும் எனக்கு கோபம் வந்தது உண்மைதான். ஆனால் அவரை இழிவு படுத்தியோ மனம் வெறுந்தோ நான் பேசலே! இந்தச் சம்பத் இப்படி செஞ்சுட்டாரே!!" என்று கலைவாணர் அவர்கள் வருத்தத்தோடு தெரிவித்தார்கள்.

அதோடு அண்ணாவிடம் நடந்ததையெல்லாம் தெரிவிக்குமாறு என்னிடம் சொன்னார்கள். 'சரி' என்று தலை ஆட்டினேனே ஒழிய நான் அண்ணாவிடம் சொல்லவில்லை! நான் என்ன சொன்னாலும் கலைவாணருக்கு 'வக்காலத்து' வாங்குவதாக அண்ணா அல்ல அவர் நிலையில் உள்ள யாருமே கருதத்தான் செய்வார்கள்.

அதோடுசம்பத்துக்கு அண்ணாவிடம் இருந்தசெல்வாக்கின்வலிவு அதிகம்! அதனால் மனதுக்குள்ளேயே புழுங்கியவனாகப் பேசாமலிருந்துவிட்டேன். தற்செயலாக, மறுசமயம் சந்திக்கநேர்ந்தபோது என். எஸ். கேயிடம் உண்மையைச் சொன்னேன்.

"நீங்களே வந்து அண்ணாவை பார்த்துப் பேசுங்க! எல்லாம் சரியாகப் போய்விடும்" என்று.

அதன்படியே ஒருநாள் மாலை 7க்குக் கலைவாணர் நேரே அண்ணாவைப் பார்க்க காஞ்சிபுரம் வந்தார். 'திராவிட நாடு' அலுவலகத்

அரங்கண்ணல்

திலிருந்த நான் அண்ணா வீட்டிலிருப்பதாகத் தெரிவித்தேன். அவர் போனதும் என்ன நடக்கிறதென்று அறியும் ஆசையால் நானும் போனேன்.

தன்னைத்தாறுமாறாகத் திட்டிய ஒருவரிடம் முகங் கொடுத்துப் பேசச் சாதாரணமாக யாருக்கும் மனம்வராது. ஆனால் அண்ணா கலைவாணரைக் கண்டதும் வழக்கம்போல் வரவேற்றிருக்கிறார்.

கலைவாணர் போனதும் நேரே போய் அண்ணாவின் எதிரில் உட்கார்ந்திருக்கிறார். நான் போனபோது அண்ணாவிடம் "நாக்கை" பற்றி விவரித்துக் கொண்டிருந்தார் என். எஸ்.கே.

"மனுஷன் நாக்கு ரொம்பப் பொல்லாததுங்க! அது என்னென்னசெஞ்சிடுது. யாகாவாராயினும் நாகாக்கன்னுவள்ளுவர் சொன்னது ரொம்பச் சரி. இதையே பல்லவியா வைச்சு—நான் எடுக்கிற படத்திலே ஒரு பாட்டுவைக்கப்போறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். என்னாகுமோ, இருவர் உறவும் முறிந்துபோய் விடுமோ என்றஞ்சிய எனக்குப் பெருமூச்சு வந்தது அண்ணாவின் பெருந்தன்மையைக் கண்டேன்! பூரித்தேன்!!

சிலபேர் இருக்கிறார்கள், செல்வாக்கும்பெருமையும் உயர உயர அதற்கு தக்கபடி நடக்க வேண்டுமெனக் கருதுகிறவர்கள். எது பெருமை? எது செல்வாக்கு?—என்பதன் பொருளை அறியாமல், ஆடம்பரத்துக்கு, 'அல்டாப்'புக்கும் தன்னை இரையாக்கிக் கொள்கிறவர்கள். மாபெரும் உபகண்டமே தன்னுடைய பெயரை ஜபிக்கிற அளவுக்கு காந்தியடிகளார் வளர்ந்த நேரம். இலண்டனிலே நடந்த வட்டமேஜை மாநாடொன்றுக்கு பிரிட்டிஷார்அழைப்பின் பேரில் போயிருந்தார். நாலு பேருக்கு மத்தியில் உடல் தெரியும்படி நடப்பதென்பது வெள்ளையருக்குப் பிடிக்காத ஒன்றாகும். இது அவர்களுடைய நாகரீகமாகும். ஆனால் காந்தியடிகள்இலண்டன் மாநகரில் கீழே வேட்டி, மேலே ஒரு துண்டு போட்டபடிதான் போனார்!

"என்னங்க! சூட்டும் கோட்டும் போடாமல் போகலாமா?" என்று கேட்டதற்கு, "என் நாட்டில் என்னளவுக்குக்கூட உடுத்த முடியாத ஏழைகள் இருக்கிறார்கள் என்பதை யார் மறந்தாலும் நான் மறக்க முடியாது!" என்று காந்தியடிகள் சொன்னார்கள்.

பெருமை ஆடம்பரத்திலில்லை. உண்மையாக தன் மனவிருப்பப்படி நடப்பதிலிருக்கிறது என்று காந்தியடிகளைப்போல் கருதுகிறவர் அண்ணா!

என். எஸ். கே. வாங்கியனுப்பிய காரைத் திருப்பியனுப்பிய செய்தியைக்கேள்விப்பட்ட ஜூபிடர் பிக்சர்ஸ் அதிபதிகளான சோமுவும, மொகைதீனும் உடனடியாக ஒரு கார் வாங்கி அண்ணாவின் உபயோகத்துக்கெனக் கொடுத்தார்கள். இப்போதுவைத்திருக்கும் 4758 கார்தான் அது.

அந்த கார் வருவதற்கு முன்பு ஆபீசிலிருந்து அண்ணா அவர்கள் சைகிளிலேயே போவார்கள்! நான் கூடநினைப்பதுண்டுஅண்ணா ஏன் இப்படிச் சைகிளில் போக வேண்டும் என்று. ஆனால் அவர் கொஞ்சங்கூட அதைப்பற்றிக் கவலைப்பட்டது கிடையாது.

காந்தியடிகளின் எளிமையும் அந்த எளிமையின் மூலம் எது பெருந்தன்மையானவாழ்வு என்று உணர்த்தியதையும்நான் எண்ணியெண்ணி மகிழ்வேன்!

உண்மையுடன் வாழ்வது தானே பெருந்தன்மை? ஊர் மெச்ச வேண்டுமென்பதற்காகத் தன்னுடைய உண்மை நிலைக்குப் போர்வைபோட்டு மூடிவாழ்வது போலிகள் செயல்தானே! அண்ணா அவர்களுக்கு போலித்தன்மை கொஞ்சங்கூட பிடிக்காது

அவருடைய பெருந்தன்மையான சுபாவத்தின் இன்னொரு கட்டம், அவர் பிறரிடம் பழகுவது தான்! நான் 'திராவிட நாடு' ஏட்டுக்குப் பணியாற்றப் போன போது பெரிய எழுத்தாளன் அல்ல.

ஆனால் இயக்கத்தின்பால் ஆர்வங்கொண்டவன் என்கிற எண்ணம்அண்ணாவுக்கு என்பால் அன்பையும் நம்பிக்கையையும் தூண்டியது! நான் அதுவரையில் பெரிய கட்டுரை எதையும் எழுதியவனல்ல என்னைக் கட்டுரையெழுதும்படி அண்ணா சொன்ன அந்தநாள் இன்னும் கவனத்திலிருக்கிறது, கீழே ஆகஸ்டு 15ந் தேதிய சுதந்திரதின விழாவையொட்டி வானொலி பாடிக்கொண்டிருக்கிறது!

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள், 'பாலைவனம் சோலைவனம் ஆகிடவேண்டும்!' என்று பொழிந்து கொண்டிருந்தார். அண்ணா வீட்டின் மொட்டை மாடியில் (இப்போது அறைகள் உள்ளன) பழையபேப்பர்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். நான் அங்கேயே தூங்கிவிட்டேன். என்னை எழுப்பி இரண்டு மூன்று நாளேடுகளில், 'மார்க்' செய்து கொடுத்து இந்தச் செய்திகளைப் பிணைத்து தேசிகர் பாடிய பாட்டின் பல்லவியைத் தலைப்பாக வைத்து ஒரு கட்டுரை எழுது என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்!

பத்திரிகை பூராவுக்கும் (16பக்கமும்) வருமளவுக்குத்தீட்டித்தள்ளிவிட்டேன்! காலையில் அண்ணாவிடம் காட்டினேன். ஏங்கே ஏதாவது திருத்தினால் என் ஆர்வம் பட்டுப் போய்விடுமோ என்று கருதி 'கம்போசுக்குக் கொடு' என்று சொல்லிவிட்டார். கம்போசாகி வந்ததும், கட்டுரை இவ்வளவு பெரிதாக இருக்கக்கூடாது என்று சொல்லி அதை இரண்டாக்கி இன்னொரு பகுதியை வேறொரு தலைப்பில் போடும்படிச் சொன்னார்!

வேறு யாராயிருந்தாலும் சலிப்பர்; செச்சே என்பர், சொல்வதையும் அதட்டிச் சொல்வர்; தம்முடைய 'உயர்வு' தன்மையை நிலைநாட்டிக் கொள்ள முயல்வர். அண்ணா அந்தவிஷயத்தில்கூடப் பெருந்தன்மையுடையவர்! அதற்குப் பிறகு எனக்கு துணையாகத் தோழர் வில்லாளனை வைத்துக் கொள்ளுமாறு அவர் சொன்ன விதம் உண்டே...உண்மையில், பழைய நினைவுகளைப்போல நல்லதொரு விருந்தே இருக்க முடியாது!!

—வளரும்

நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

கழகத் தோழர்கள் அனைவரிடமும் இருக்கவேண்டிய அறிவுக்கு விருந்தளிக்கும் அரிய கொள்கை விளக்க நூல்!

திராவிட நாட்டின் ஓவியத்தின் மீது அறிஞர் அண்ணாவின் திருஉருவப்படம் பொறித்த அழகிய முகப்பு!

இன்ப திராவிடம்

(அறிஞர் அண்ணா எழுதியது விலை ரூ. 1—50)

கறுப்பு, சிவப்பு பொன்னிற அட்டையின்மீது நாவலரின் திருஉருவப்படம் கொண்ட அழகிய முகப்பு!

தி. மு. க.

(நாவலர் இரா. நெடுஞ்செழியன் எழுதியது—விலை ரூ. 2—00)

இயக்க நண்பர்களுக்கு பரிசு வழங்க நூல்கள். உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள். இரண்டு புத்தகங்களையும் பதிவுத் தபாலில் பெற ரூ. 4-25 அனுப்பவும். புத்தகங்களை நூல் அஞ்சலில் பெற விரும்புவோர் புத்தக விலையுடன் 25. நயா பைசா சேர்த்து அனுப்பவும்.

கிடைக்குமிடம்:—எஸ். கே. ரெசாக், வந்தவாசி வட்ட தி.மு.க செயலாளர், 15, அக்பர் ரோட், வந்தவாசி, அஞ்சல்(வ-ஆ)

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 24-11-61 கதிர் - 39

நாமெல்லாம் கூடுவோம்

*   *   *

மிக மிக முக்கியமான கட்டம் - நாடு எதிர்பார்க்கும் நல்லதொரு கட்டம்—விடணர்களும், விம்புக்காரர்களும் நாணவேண்டிய கட்டம்—நமக்குள்ள பலம் என்னதென்பதை உலகம் உணரவேண்டிய கட்டம்—ஒடேங்திகளே! என்று கேலி செய்வோநக்குப் பாடம் புகட்ட வேண்டிய கட்டம்—பணமல்ல, பொதுவாழ்க்கையின் நாணயம்; தூய்மையான கொள்கையென்பதை உணர்த்த வேண்டிய கட்டம் வந்து கொண்டிருக்கிறது, சகோதரர்காள் வந்து கொண்டிருக்கிறது!

முதலைபோல் வாயைப் பிளந்தபடி யார் விழுவார்கள் என்று காத்திருக்கும் காங்கிரஸ் கட்சி, தன்னுடைய இரத கஜதுரக பதாதிகளுடன் பயணம் கிளம்பத் துவங்கி விட்டது. ஊர் ஊராக, வீடு விடாகப் போய் ஆள்பிடிப்பது என்கிற இரகசியமான வேலைகளை இப்போதே ஆரம்பித்து விட்டார்கள் காங்கிரஸ்காரர்கள். எதிர்நோக்கி வந்து கொண்டிருக்கும் பொதுத் தேர்தலில் எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்கிற முயற்சியில் அவர்கள் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள்! எப்போதுமிலாத அளவுக்கு இப்போது அவர்களுக்குச் சம்பத்தின் கைலாகும், அவரது தந்தையின் அரவணைப்பும் சேர்ந்து கிடைத்திருப்பதால், இன்னும் ஆர்வமும்ஊக்கமும்கொண்டுலா வருகிறார்கள்!!

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, கட்டுக்கோப்பும், காளைப்பருவத்தினரும் கொண்டதாக விளங்குவதோடு 'தனியரசு' விரும்பும் இயக்கமாகத் திகழ்வது திராவிட முன்னேற்றக்கழகம் ஒன்றே!

அடிக்க அடிக்க உந்திக் கிளம்பும் பந்துபோல், அடக்குமுறைகள் வீசப்பட்டாலும் கழகம் நிமிர்ந்து நிற்கிறது—அடி உதை என்றாலும் வாங்கிக்கொண்டு அன்பு வழியை விட்டுப் பிறழாமல் நடக்கிறது—இருப்போரனைவரும் ஏழைகள் என்றாலும் அணா பைசாவாகக் குவித்துச்சுமார்மூன்று இலட்சரூபாய்கள்வரைசேர்த்து விட்டார்கள்தமிழ்நாட்டில்எங்கு சென்றாலும்தி.மு.கவின் கொடி பறக்கிறது—தமிழ்க்கொடிககளெனக் கூறத்தகுந்தகோலமிகு பெண்டிரும் அவர்தம் குறுநகைக்குன்று குணளரும், அவர்களை ஈன்றெடுத்த, பெற்றோரும் அவர்தம் சுற்றமும் கூடிநின்று, 'வாழ்க அண்ணா!' என்று வாழ்த்திடுகின்றனர் எங்கும்.

கழனிகள் களங்களாகக் காட்சி தருகின்றன! ஆலைகள் தி. மு. க. தோழர்கள் அணிவகுத்து நின்றிடும் அழகுமிழ்ச் சாலைகளாக விளங்குகின்றன! கட்டை வெட்டுகிறவர்கூட தன் தோளில் கருப்பும் சிகப்பும் கலந்த துணியைத்தான் தலையில் கட்டியிருக்கிறார். மூட்டை தூக்கும் தொழிலாளியின் மூச்சுகூட, "வாழ்க வாழ்கவே! வளமார் எமது உதயசூரியன் என்று முணு முணுக்கிறது. கைத்தறிகள் சுழலுகின்றன, இருவண்ணப் 'பார்டர்' உள்ள புடவைகளையும்வேட்டிகளையும் நெய்தபடி: கூத்தரங்கங்களில், "காந்தி மகான்! காங்கிரசு முகாம்!" என்று பாடப்பட்ட நிலைமைகள் மாறி, குக்கிராமங்களில் கொண்டு சென்று 'டேரா' போட்டாலும் கழகத்தைப்பற்றியும் அண்ணாவைப்பற்றியும் இரண்டுபாட்டாவது பாடினால்தான் 'பலே, பேஷ்!' என்கிற பட்டம் பெறமுடியும் என்கிற நிலைமை.

கல்வி நிலையங்களுக்குள்ளும் கழக மணம் இல்லாத இடமில்லை! இப்படியொரு நிலை, முன்பு காங்கிரசுக்கு மட்டுமே இருந்தது; அது மாறி இப்போது கழகத்துக்கு வந்திருக்கிறது!

"கண்ணே! கனிரசமே! உன்னைக் காணவே நான் காத்திருக்கிறேன்..." என்று காதலன் அகமகிழ்வுடன் கூறுவான், தன்னருமை காதலியாளைக் கண்டதும், கானம்பாடும் அந்த வானம்பாடிகளைக் கண்டதும், அவளை அடைய முடியாமற் போனேமே எனும் கவலை சூழ்ந்த எத்தன் என்ன நினைப்பான்? எப்படிடா, இவர்தம் காதலைத் தூண்டிப்பது, பணத்தால் மயக்கலாமா, ஆடம்பரத்தால் வசீகரிக்கலாமா, அது தருவேன் இது தருவேன் என்று ஆசைகாட்டிப் பார்க்கலாமா என்றுதானே எண்ணுவான். இன்று காங்கிரசின் நிலை, இது தான். கழகமெனும் காதலன்பால் தன் நெஞ்சையும் நினைப்பையும் வைத்திருக்கும் மக்கள் இதயமெனும் காதலியைக் கவர, கவாத்து, தண்டால் பணஓசை என்று பலவழிகளையும் முயற்சிக்கின்றனர், காங்கிரசர்!

பல இடங்களுக்கும் செல்லச் செல்ல பயம் குறைந்தபாடில்லை; அதிகமாகிறது. பயம் அதிகமாக அதிகமாக, "இன்னும் கொஞ்சம் அதிகம் செலவாகும். அவ்வளவுதான், இந்தப் பசங்க ஒரு இணையா?" என்று பேசியபடியே பணந்திரட்டும் வேலையை பணம் செலவழிப்பவர்களைப் பிடிக்கும் வேலையை, வெகு வேகமாகச் செய்கிறார்கள்!!

இங்குள்ளவர்களுக்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலிருக்கும் அத்தனைக் காங்கிரசு தலைவர்களுக்கும் நம்மீதுகண்ணிருக்கிறது. உலகுக்கெல்லாம் தத்துவ குணத்தைப் போதிக்கும் பண்டித நேரு அவர்களுக்கே நம்மை ஒழித்துவிட வேண்டுமென்கிற நப்பாசையுள்ளது என்றால் நமக்கிருக்கும் எதிர்ப்பின் அளவையும் தரத்தையும் நாம் ஒருக்காலும் குறைத்து மதிப்பிடமுடியாது! டாடாவும் பிர்லாவும் இருக்கின்ற கட்சி காமராசர் பாஷையில் நோட்டு அடிக்கும் இயந்திரமே அவர்களுடைய சர்க்கார் கையில்தானிருக்கிறது, காரும், ஜீப்பும் கொண்டுள்ளகட்சி கனதனவான்கள் உள்ள கட்சி, அதற்குப் பண விஷயத்தில் என்னகுறை இருக்கமுடியும்? கழகத்தைப்போல் கந்தனும் முத்தனுமல்ல காங்கிரஸ் அபேட்சகர்கள்! வட்டிக்கடைப் பூபதி குட்டி போடுமளவுக்குப் பண மூட்டைகள் கொண்ட சீமான்கள் பெரிய பெரிய பஸ் முதலாளிகள், பராக்குகூறப் பலபேரை வைத்து வாழும் பண்ணைகள், வழக்கம்போல இத்தடவையும் ஏழைப் பங்காளர் காங்கிரசுக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

இவர்களில் எத்தனை பேருக்கு அரசியல் புரியும்—எத்தனைபேர் இந்திரா காந்தியென்றால் யார் என்று அறிவார்கள்—எத்தனை பேருக்கு செக்கிழுத்த சிதம்பரனாரையும் தில்லையாடிவள்ளியம்மையும் தெரியும என்பது பெரிய வேடிக்கை! இருந்தாலும் "பணம் செலவு செய்வார்கள்" போதாதா, காங்கிரசு அபேட்சகராக நிற்க.

அதிலும், அண்ணா அவர்கள் தொகுதியை, அளகேசனும் அவர்தம் சகலை பக்தவத்சலமும் அளந்து அளந்து வருகின்றனர் அனுதினமும். அண்ணாவைத் தோற்கடித்து விடுவதில்தான் நமது ஜன்ம சாபல்யம் இருப்பதுபோல் உலா வருகின்றனர். அதற்கு என்றே தமிழநாடு காங்கிரசும் டில்லிப்பீடமும் தனிப் பணம் ஒதுக்கினாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை.

அந்தளவுக்கு, எரிச்சலும் புகைச்சலும் குடைகிறது. அவர்களை இதோடு, 'தேர்தல் புலி' என்று பிறரால் பெரிதும் புகழப்பட்ட மதிப்பு வேறு இருக்கிறது காமராசருக்கு! அந்த மதிப்பு மாறாமலிருக்க வேண்டுமென்கிற ஆசை அவரைப்பலவித உபாயங்களையும் குறுக்கு வழிகளையும் நாடவே செய்யும்.

எனவே, இந்தனை ஆர்ப்பாட்டங்களுக்கும் பணபலத்துக்கும், 'தினத்தந்தி'த்தனத்துக்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு சகோதரர்காள் நமக்கு இருக்கிறது!

எத்தனையோ இடர்களைச் சமாளித்தவர்கள் நாம். தத்தித் தவழ்ந்து சரியான பாலோ, கஞ்சியோகூட இல்லாமல் எழுந்து நிற்கின்றவர்கள் நாம். ஏளனம் பேசியோர், தூசென மதித்தோர், இவர்களையெல்லாம் துச்சமெனத் தள்ளி வளர்ந்தவர்கள். நாம் படாத பாடில்லை! அனுபவியாத தொல்லையில்லை!!

அத்தனைப் பாடுபட்டு கண்ணைவிட மேலானதாககருதிவளர்க்கும் கழகத்துக்குச் சோதனையான கட்டம் என்று கருதுகின்றனர், மாற்றார். நாமறிவோம் மக்கள் தீர்ப்பு எப்படியிருக்கும் என்பதை! என்றாலும், பெரியதொரு 'சோதனை, என்று மாற்றார் கருதும் தேர்தலைப்பற்றி, நாமெல்லாம் கலந்துறவாடுதல் நன்றன்றோ? நமக்கு வலிவும் தெம்புமூட்ட இதைத் தவிர வேறென்ன சாதனம் இருக்கிறது!!

நாடெங்குமுள்ள நாமெல்லாம் டிசம்பர் 16, 17 தேதிகளில் சந்தித்துப்பேசி புதியதொரு உற்சாகமும் பூரிப்பும்பெற கோவையில்

11-ம் பக்கம்

மந்திரிப் பதவி பரம்பரைச் சொத்தா!

அரசியல் என்ன, அவர்கள் வயலா!!

"இது என்னய்யா அக்கிரமம்! எப்போது பார்த்தாலும் நான்தான் எம். எல். ஏ., நான்தான் மந்திரி என்று ஒரு கூட்டமே சொல்லிக் கொண்டிருப்பதா? அவர்களைப்போலத்தானே நாமும் அரசியலில் ஈடுபட்டிருக்கிறோம். அழைப்பு வந்தால் ஓடுகிறோம். நிதி சேர்க்கச் சொன்னால் சேர்த்துத் தருகிறோம், ஜே! போடுகிறோம், ஆடுகிறோம், பாடுகிறோம் இதற்குத்தான் நாம், இன்பமனுபவிக்க மட்டும் அவர்களா?"

"அதுதான் நானும் கேட்கிறேன்! உங்க பரம்பரை தொழில் என்னவென்று கேட்டா, மந்திரித் தொழில் என்று சொல்கிற அளவுக்கு விடாப்பிடியாக உட்கார்ந்துகிட்டே இருக்காங்களே? ஏன், நமக்கெல்லாம் ஒரு 'சான்சு' கொடுத்துப் பார்க்கக்கூடாதா! இளம் ரத்தம் வேண்டும்—வாலிபர்கள் நிறைய தேவைன்னு வாய் பந்தல் மட்டும் போடுறாங்க. ஒரு வாலிபனுக்குக்கூட வாய்ப்புத்தர மாட்டேங்கிறாங்களே!"

"அவுங்க யாரய்யா தர்றதுக்கு! நாம் எடுத்துக்குவோம்!! யார் நம்மைக் கேட்கிறதுக்கு? நாம்தானே காங்கிரஸ். நமக்குப் பெரியவரான காங்கிரஸ் தலைவர் சஞ்சீவரெட்டி சொல்லவில்லையா. பத்தாண்டுக்குமேல் யாரும் காங்கிரசில் பதவியிலிருக்கக் கூடாது - புதியவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று, அதைக்காட்டி பழையவர்களுக்கு, 'சீட்' இல்லை என்போம். வெளியில் வந்து அவர்களும் கொஞ்ச நாளைக்கு உழைக்கட்டுமே!!"

*   *   *

குஜராத் மாநிலத்தில் இக் குமுறல் உச்ச கட்டத்துக்குப் போய் விட்டது! இப்போது டில்லியிலும் மாகாணத்திலும் யாரார் மந்திரிகளாகவும் எம். எல். ஏ, எம். பிக்களாகவும் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் "சீட்" கொடுப்பதில்லையென்று அந்த மாநில காங்கிரஸ் கமிட்டி எடுத்திருக்கிறது!!

"இந்த முடிவை ஆட்சேபித்து யாராவது மேலிடத்துக்குச் சிபார்சுக்கு போனால் அவர்களை துரோகிகள் என்போம்!" என்று குஜராத் மாநிலக் காங்கிரஸ் தலைவரான தகோர்லால்என்பார் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்.

பழையவர்களென்று கருதப்படும் மொரார்ஜி தேசாய், ஜீவராஜ்மேத்தா போன்றவர்களுக்குக் கூட 'சீட்' கொடுக்க முடியாதெனச் செப்பியிருக்கிறார்கள்! இதையே தமது தேர்தல் முழக்கமென குஜராத காங்கிரஸ் வாலிபர்கள் கொண்டுள்ளவுகிறார்கள்—

காங்கிரசில் குமுறல்

மாநிலக் காங்கிரசுகமிட்டித்தமது வசமிருப்பதால் இந்த முடிவை மார்தட்டி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சாதகமாக காங்கிரசு தலைவர் சஞ்சீவியின் தூற்றலைக் குறிப்பிடுகிறார்களாதலால், மேலிடம் என்ன செய்வதென்று ஆலோசிக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகித் தவிக்கிறது!

ஜனநாயகம், சுழலும் சக்கரம் போல் பலருக்கும் வாய்ப்பளிக்கும் அரசியல் முறையாகும்!

ஆனால் ஒருமுறை ஜனநாயகம் அளித்த வாய்ப்பை வைத்துக்கொண்டு இந்திய உபகண்டத்தில் 'அரசியல் மிராசு'கள் ஏராளமாக உருவாகி விட்டார்கள்!!

ஆட்சி நடத்தும் கட்சியாக அவர்தம் காங்கிரசு இருந்த காரணத்தால், ஒருமுறை மந்திரியாகி விட்டால் மறுமுறையும் மந்திரி, அந்த மந்திரிப் பதவிப் போனால் பெரிய மந்திரிப் பதவி, அது போனால் கவர்னர் என்று இப்படி ஒருமுறை வளர்ந்து விட்டதே தவிர உண்மையான ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் மாண்பு மக்கி மடிந்துவிட்டது!

அரசியலில் ஒருசில ஆதிக்கக்காரர்களுக்கு வாய்ப்பளிக்கும் கூற்றாகி விட்டது, ஜனநாயகம் என்கிற புனிதக் கோட்பாடு.

பொதுவாழ்க்கை யென்றாலே' எப்படியாவது ஏணிப்படிகளையும் தயாரித்து அவர்கள் மூலம், மந்திரிப்பதவியில் அசையாமல் உட்கார்ந்திருப்பதுதான் என்றாகிவிட்டது இன்று.

இதனாலேயே போட்டிகள்! தகராறுகள்! சண்டைகள்! குழப்பங்கள்! குதர்க்கங்கள்! சிண்டு முடிதல்கள்! சீற்றக் காட்சிகள் முதலியன முளைத்து இவைகளைச் சரிகட்டுவதே தமது கடன் என்று கருதி தமது பதவிகளைப் பயன்படுத்தும் கட்டத்துக்குப் போய் விட்டார்கள் காங்கிரசுகாரர்கள்.

முதலாளித்துவம்போல் இப்படி பொரு அரசியல் ஆதிக்கம் உருவாகிறதென்பதை உணர்ந்ததாலேயே தோழர் சஞ்சீவரெட்டி அவர்கள் தெரிவித்தார்கள்—பண்டித நேருபோன்றவர்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளித்து ஏனையோரெல்லாம் பத்தாண்டுகளுக்கு மேல மந்திரியாகயிருந்திருந்தால் விலகிவிட வேண்டும். நிர்மாண வேலைகளில் ஈடுபட வேண்டும் என்று.

பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் மந்திரிகளாகவும், எம். எல். ஏக்களாகவும் இருந்துதான் பணியாற்ற வேண்டும்என்பதில்லை தன்னால் எட்டுக்கூரைக் குடிசைகளைக் கட்டிக் கொடுக்க முடிந்தது! கிராமத்துப் பள்ளிக்கு ஆயிரம் கீற்றுகளை முடைந்து கொடுக்க முடிந்தது—அந்த வீட்டில் சீக்கு, இந்த வீட்டில் நோய் என்றால் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் வைத்திய சிகிச்சைப் பெற்றுத்தர முடிந்தது—என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிற பொதுசன ஊழியனுக்கு இந்தப் பதவிகள் கால் தூசுகள் போல!!

எம். எல். ஏ, மந்திரி—என்பது பதவிகளே அல்ல! சனநாயகம் பணிபுரிய வழங்கும் சாதனங்களாகும்!!

ஆனால் அவைகளைப் பதவிகள் எனக் கருதுமளவுக்குச் செய்தது காங்கிரசுதான். அவைகளுக்குப் பளபளப்பை உண்டாக்கியதும், காங்கிரசுதான்.

காந்தியடிகள் சொன்னதுபோல மேற்படி வாய்ப்புகளை அடையப் பெற்றவர்கள் ஆடம்பரமின்றி வாய்ந்திருப்பார்களாயின், பளபளப்பு ஏற்பட்டிருக்காது!!

ஒரு எம். எல். ஏவாகிவிட்டால் வேண்டிய லைசென்சுகளை வாங்கலாம், பர்மிட்டுகள் பெறலாம், தனக்கும் தனக்கு வேண்டியவர்களுக்கும் சர்க்காரில்சலுகைகள் பெறலாம் என்கிற நெறியற்ற தன்மையை உண்டாக்கிக் காட்டியவர்கள் காங்கிரசார்தான்.

ஒரு மந்திரியாகி விட்டால் மாதம் ரூ. 1500 சம்பளம் பெறலாம், அது இது என்று அந்தளவுக்கும் படிகள் வாங்கலாம், ஆக மொத்தம் ரூ, 2000 காணலாம், வேண்டியவர்களை அதிகாரிகளாக்கலாம், சொந்த விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்கிற கேவலமான ஆசைகள் வளர்க்கப்பட்டதும் காங்கிரசால்தான்.

பிரகாசம் அவர்கள் இம்மாநிலக் காங்கிரசு மந்திரிகள்மீது, பெர்மிட், இலஞ்சம், ஊழல்என்று பக்கம் பக்கமாக எழுதிக் குற்றப் பத்திரிகைப் படித்தபோது, இந்த நாற்றம் நன்றாகத் தெரிந்தது! காங்கிரசை விட்டுச்சென்ற ஆச்சாரியா கிருபளானி, ஆச்சாரியார், முன்ஷி, போன்றோர்கூடை கூடையாக ஒவ்வொரு நாளும் கொட்டுகிறார்கள் காங்கிரசு மந்திரிகளின் ஊழல்களைபற்றி!!

ஒரு அரசியல் இயக்கம், சட்டசபைப் பணியையும், வாய்ப்பு கிடைத்தால்ஆளும் பொறுப்பையும் பெரியதொரு தியாக வேள்வியாக கருத வேண்டும். அதுதான் அறநெறி! ஜனநாயக முறை!!

அடக்கமும், அன்பும் பணிவும், சுயநலமற்ற தன்மையும், மக்கள் பிரதிநிதிகளாக வருகிறவர்களுக்கு, முன்பு இருந்ததைவிட அதிகமாக ஏற்படுதல் வேண்டும்.

ஏ! அப்பா! எம். எல். ஏ. வாகி விட்டால் எப்படி உழைக்க வேண்டியிருக்கும் தெரியுமா? மந்திரியாகி விட்டால்நூறுகாந்தியடிகளை ஒன்று சேர்த்து வார்த்தஉருவம் போலிருக்க வேண்டியிருக்கும்என்கிற அச்சமும் பொறுப்பும் உண்டாகும்படிச் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

"காங்கிரசாராட்சியில் பொறுப்பு, புடலங்காயாகி விட்டது!!

11—ம் பக்கம்

எங்கும் விற்பனையாகிறது!

கலைச்சோலை

(மாதம் மும்முறை தி. மு. க. ஏடு)

எல்லோரும் படித்து இன்புறவேண்டிய புரட்சி ஏடு!

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டுபவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விபரங்கட்கு: கலைச்சோலை, 21, ஐயம்பெருமாள் முதலி தெரு, சென்னை-14

இரு மொழிக்கும் பொதுவான இத்தனிவடிவங்களன்றித் தெலுங்குக்கும் கன்னடத்துக்கும் தனி வடிவங்கள் உண்டு.

தெலுங்குத் தனி வடிவங்கள்:

தெலுங்கில் ஆ, ஒ, ஓ, ஔ சேரும்போது தலகட்டு எழுத்தின் உடலுடன் ஒட்டாதிருக்கும் நான்கு எழுத்துக்களில் தலகட்டகன்று உயிர்க்குறி தலகட்டின் இடம் கொண்டு எழுத்தினை வெட்டிச் செல்கிறது.



தெலுங்கில் ஆ சேரும்போது (ஹ்ஆ) தனிச்சிறப்பான வடிவம் கொள்கிறது.

உ, ஊ சேரும்போது உயிர்க்குறி ஒரெழுத்தில் தனி இணைப்புப் பெறுகிறது.



ஒ, ஓ சேரும்போது நான்கு எழுத்துக்கள் தனிச் சிறப்பு வாய்ந்த வடிவம் பெருகின்றன.



எகரக் குறியுடன் உகர, ஊகாரக் குறிகள் சேர்ந்து மேலிரண்டிலும் ஒகர, ஓகாரம் அடைகின்றன. பின் இரண்டிலும் எகரக் குறியுடன் உகரக் குறி சேர்ந்து ஒகர வடிவமும், அதனுடன் ஆகாரக் குறி சேர்ந்து ஓகார வடிவமும் அடைகின்றன.

—தொடரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சியம். அதனுல் மிகவும் மரியாதையுடன் அவரிடம் தெரிவித்தேன்.

"எனக்கு அய்யர் வைத்துச் செய்யப்படும் கலியாணங்களில் நம்பிக்கை கிடையாதப்பா! அது கூடாதென்று கருதுகிறவன் நான், என் கலியாணம் பதிவு முறைப்படி நடக்குமென்றே என் நண்பர்களிடம் இதுநாள் வரை, சொல்லிவந்திருக்கிறேன். அதன்படி நடக்க வேண்டும் என்பதே என் ஆசை."

எனக்கிருந்த ஒரே ஒரு துருப்புச் சீட்டு இதுதான்! ஆனுல், என்ன ஆச்சரியம், அப்பா ஒரு வார்த்தைகூட மறுக்கவில்லை.

'உன்னைவிட உன் மாமனுர் பல மடங்கு சீர்திருத்தக்காரரப்பா! ஒரே பெண், சொத்து நிரம்ப. ஆனுலும் கலியாணத்தை மட்டும் புடவை துணிமணிகள் உள்பட ஆயிரம் ரூபாய்க்குள்தான் நடத்துவாராம். விழாக்களுக்காக நிறைய செலவு செய்யலாகாது என்பது அவர் கொள்கையாம். உன்னைப் போலவே அவருக்கும் வைதீகச் சடங்கென்ருல் பிடிக்காதாம். அழகான பெண். சொத்துக்காரி. அம்மாவுக்கோ உடம்புகடுமையாயிருக்கிறது, அதனுல் அவர் சொன்னதற்கெல்லாம் சம்மதித்துவிட்டேன். பதிவு திருமணம் தான் செய்வேன் என்ருர் அவரும். உன் எண்ணமும் உன் மாமனுர் கருத்தும் ஒரே மாதிரியிருப்பதே ஒரு நல்ல சகுனம்!" எனருர் தந்தை.

காப்பியடித்துப் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும்போது பேராசிரியர் பிடித்துவிட்டால் எப்படியோ, அப்படியானேன்! அப்பா சொன்ன அந்த 'மாமனுர்' மீது எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

எத்தனை மாமனுர்கள் வைதீகப் பிச்சுகளாகயிருக்கிருர்கள்? எனக்கென்று வந்த மாமனுரும் என்னைப்போலவா இருக்க வேண்டும்? சே! நல்ல மாமனுர்! நல்ல காந்தா! என் வாழ்க்கையில் நான் விரும்பாமலே குறுக்கிட்ட அந்த இரண்டுபேருக்கும் சரியான பாடம் புகட்டவேண்டும். நடக்கட்டும் கலியாணம்! கடைசிவரையில் இரண்டு பேர் கண்களிலிருந்தும் நீர் சொட்ட வைக்கிறேன்!! இவ்வளவு பெரிய சீர்திருத்தக்காரர் என்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டாம்?

நேற்று வரையில் எங்கேயோ இருந்துவிட்டு எனக்கு 'மாமனுராகவும்' 'மனைவி'யாகவும் உரிமை கொண்டாட இவர்கள் யார்? இவர்களுக்குப் கொஞ்சமாவது சுயமரியாதை என்பது இருக்காதா! என்னையும் ரமாவையும் பிரிக்க வந்த வில்லன்கள்...இருக்கட்டும்; இருக்கட்டும்.

* * *

எதிர்பாராததுநடக்கும் என்பது போல எனக்கொரு சபலம், இந்தக் கதைகளைப் படிப்பதும், சினிமாக்களை பார்ப்பதும் வாலிப உள்ளங்களில் 'சஸ்பென்சு'களின் மீதுதான் எவ்வளவு நம்பிக்கையை உண்டாக்கி விடுகின்றன! காரில் புதுமாப்பிள்ளையான நான் உட்கார்ந்திருக்கிறேன். என் மனைவியாகப் போகும் காந்தாமணமேடைக்கு அழைத்துவரப்படுகிருள், முதலில் அவளைப் பார்க்க நான் விரும்பவில்லை. மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஏறிட்டுப் பார்க்கிறேன், காந்தா இல்லை! என் ரமா! என் ரமா! என் ரமாவும் என்னைப் பார்க்கிருள். என் உடம்பெல்லாம் 'சில்'லிட்டு விடுகிறது...இப்படியே 'அடிக்கடி' எண்ணிக் கொண்டிருந்த நான் 'அவளை'ப் பார்த்தேன்!

என் கற்பனைபோல அவள் ரமாவாக இல்லை; காந்தாவாகத் தானிருந்தாள்!!

ஏமாற்றத்தைவிடக் கொடுமையான அனுபவம் உலகில் கிடையாது. என் எதிர்கால மனைவியின் முகத்தை பார்க்கவே மறுபடியும் நான் விரும்பவில்லை. இயந்திரத்தைப்போலக் கையெழுத்திட்டேன்—மாலையைப் போட்டேன்—என் உள்ளம் அனுபவிக்கும் வேதனையை உணராதப் பெண்வீட்டுக்காரர்கள் 'பயந்தாங்கொள்ளி மாப்பிள்ளை!' என்று பரிகாசம் செய்தார்கள். பாசத்தின் காரணமாக—என் அன்னையின் ஆசைக்காக—என்னையே தியாகம் செய்யும் நான் பயந்தாங்கொள்ளியாம்! இருக்கட்டும் இருக்கட்டும், இத்தனைக்கும் வட்டியும் முதலும் வாங்காமலா போகப் போகிறேன்? இன்றைக்கு இரவே 'அவளுக்குப்' புரிந்துவிடும் நான் யாரென்பது! இன்னும் இரண்டு நாட்களில் என் 'மாமனுருக்கும்' தெரிந்துவிடும் இந்த இளங்கோவின் குணம் எப்படிப்பட்டதென்பது!!

கலியாணம் என்ருல் என்ன, வெறும் காண்டிராக்ட் ஒப்பந்தமா? எலியைப் பிடித்து எலிப் பொறியில் அடைக்கும் சிறுபிள்ளை விளையாட்டா? ஆயுட்காலம் முழுதும் வாழப்போகும் இரண்டு உயிர்களுக்கிடையில் காதல் வேண்டாம்? காதலில்லாத வாழ்க்கை சாறில்லாத சக்கையன்ருே? கவிதைகளையும் காதல் வசனங்களையும்—கண்டு கண்டு உண்டு உண்டு திளைத்த ஒரு இளம் உள்ளத்துக்கு இப்படியா தண்டனை தருவது?

தன்னுடைய சுதந்திரத்துக்காக ஒரு நாடு என்னென்ன சிரமங்களைத் தாங்கிக்கொள்கிறது? அதேபோல ஒருதனி மனிதனும் தன்னுடைய சுதந்திரத்தைப்பறித்தவர்களைச் சும்மாவா விடுவது? ஒருக்காலுமில்லை. காந்தாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழியவேண்டும். அந்தக் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றையும் பன்னீர்த்துளிகள் போலக் கருதி நான் மகிழவேண்டும்.

"என்னங்க சம்பந்தி! காந்தாவின் பக்கம் மாப்பிள்ளைத் திரும்பக்கூட மாட்டேன் என்கிருராமே! கண்டால் பேசுவதில்லையாமே!!, என்று மாமனுர் என் அப்பாவிடம் குமுற வேண்டும், இரண்டு பேரும் என்னிடம் வரவேண்டும். சம்மதம் கேட்காமல் என்னைப் 'பதி'யாக்கிய சதிக்குப் பலனை இருவரும் அனுபவிக்கவேண்டும்!— ஆமாம் அதற்கான ஒத்திகைக்குச் சரியான நாள்—இன்று! இன்று இரவே...!!

* * *

பூக்கட்டில்! புளகாங்கித மணம் ...வத்தியின் வாசனை...இத்தனைக்குமிடையில் நான் இருந்த அறைக்குள் காந்தாவைக்

(10-ம் பக்கம்)

ராஜாதி ராஜா நம்ம ராஜா!

"வீராதி வீரர்! சூராதி சூரர்! தாழ்வகற்ற வந்த தீரர்! அவர் செத்தால் அடுத்தொரு ஆள் இல்லே! அடியேன் இருநாற்பது ஆண்டுகள் பட்டபாடு அவர் உழைப்புக்கு முன் தூசுபோல! ஆகாகா! என்னே இந்நாடு செய்த தவப் பயன்? உண்டோ ஒரு உத்தமர் இவர் போல்! உதவாக்கரை மக்களே, உங்களுக்கு இவரை விட்டால் வழியில்லே!!" என்று அனுதினமும், அன்புக்குரிய பெரியார் அவர்கள் பராக்குப் பாட; 'ஐயனே! மெய்யனே! கதருடை தரித்து வந்த கலியுக பிரம்மாவே! கார்த்திகேயா! கடம்பா! உமது என்ன உடம்பா! இப்படி உழைக்கிறீரே உத்தமரே! உமது அறிவும் ஆற்றலும் யாருக்கு வரும்?" என்று ஊரெங்குமுள்ள உளறுவாயர்களும் ஒன்றும் செய்ய இயலாதவர்களும் ஜாலராத் தட்ட; மிரட்சி ஒரு பக்கமும் வறட்சி இன்னொரு பக்கமும் ஆட்டி வைக்க, அவரை விட்டால் அர்பன் பாங்கித் தலைமை போய் விடுமோ, பதவி தந்து பரிபாலிக்க இருக்கின்ற நல்ல கொம்பு — இதை விட்டேன் போகவேண்டும் வம்பு? என்று மிட்டா மிராசுகள், கண்சாடையும் புன்சிரிப்பும் காட்டிக் கை கட்டி நிற்க; ஏடுகள் யாவும் ஆட; இவரை நத்தினால் ஓடுகின்ற வெள்ளத்தில் ஒரு வாயாவது குடிக்க வசதி கிடைக்காதா என்று காத்துக் கிடக்கும் 'கண்ருவிகள்' இளித்து நிற்க; இத்யாதி வைபவங்களுடன், எனக்கிங்கு நிகர் யாரோ என்று பவனி வரும் பராக்கிரம பூபதி விருதை வீரர், இந்நாட்டு முதல் அமைச்சர் காமராசர், வீடுவீடாகச் சென்றுவருகிருராம்! சென்னை மாநகரத்தின் சில பகுதிகள், திருமிகு முதலமைச்சரின் திவ்விய உருவினைத் தெரிசிக்கும் பாக்கியத்தை, இந்தக் கிழமை பெற்றனவாம்!!

என்ன குறை, என்ன இங்கே, எப்படி இருக்கிருர்கள் இங்கே வாழும் மக்கள், என்பதைக் கண்டறிய 'கனம' அவர்கள் விரும்பியிருந்தால், காலை முதல், மாலை வரை, நேரமா இல்லை! கண்ணும் நன்ருகத் தெரியுமே!! அர்த்தராத்திரியில், ஆளரவம் அடங்கிய நேரத்தில், அந்த வீட்டில் யார், இந்த வீட்டிலிருப்பது யார் என்று கள்ளனும் காமுகனும் விபரம் விசாரிக்கின்ற வேளையில், இந்த வீராதி வீரர் சென்றது, அந்தக் காலத்து மன்னர்கள் இரவு நேரங்களில் நகர் வலம் வருவாரமே தங்களின் குறைகளைக் கண்டறிய அதேபோலத் தானும் அறிந்துவர அல்ல சென்றது! தாஜா செய்ய!!

அந்த வீதியில் யார் கிடைப்பார்கள்—இந்தத் தெரு முழுக்கவும் தி. மு. கவாமே — இங்கே யாராவது அகப்பட மாட்டார்களா —அடசச்சரிய்யா! ரெண்டு ஆளைக் கொண்டாயேன்—என்கிற ஆசையுடன், அன்பர் காமராசர், அந்தி சாய்ந்த வேளையில் அங்குமிங்கும் அலைந்திருக்கிருர்.

யாரிந்த கருத்த உருவம், இருட்டோடு இருட்டாக இப்படி இருவர் மூவருடன் உலாத்துகிறதென்று ரோந்து வரும் காவலர் பிடிக்காமற்விட்டது, இரவைப் பகலாக்கும் சென்னை நகர விளக்கொளியின் உதவியாலாகும்! ஆந்தை அலறும் வேளையில் அலையும் அமைச்சரையும் அவரது சீடர் குழாத்தையும் 'ஜாமீன்' கொடுத்தழைக்கும் அவசியம் வந்திருந்தாலும் வந்திருக்கும். அந்தளவுக்கு, ஆங்காங்கும், மாலை நேர 'மைனர்' போல உலவியிருக்கிருர்கள்—ஓரோரிடம சென்று, தாங்கள் ஆரம்பித்திருக்கும் 'திக்' விஜயத்தின் சிறப்பினையும் உணர்த்த முயன்றிருக்கிருர்கள்.

தேர்தல் வருகிறதல்லவா, தேர்தல்! அதற்காக பொதுமக்களை நேரில் கண்டறிகிருராம், முதல் அமைச்சர். இத்தனை நாளும் நேரில் பாக்காமல் 'நேடோ' வுக்



கும் 'சீடோ' வுக்கும் தலைவராக அமெரிக்கா எங்கே, ஆபிரிகா எங்கே என்று அலைந்தா கொண்டிருந்தார், என்று கேட்காதீர்கள்

இவர் ஆள் பிடிக்கும் அமைச்சரல்லவா? ஆட்களைப் பிடிப்பதில் தேர்ச்சி பெற்ற காரணத்தால் தான 'கனம்' ஆனர், இவர்? அப்படி, ஆட்களைப் பிடிப்பதற்காக, 'அருமை மிகுந்தவர்' என்று திராவிடக் கழகத் தந்தைப் போற்றும் கர்ம வீரர், கால் வலிக்க அலைந்திருக்கிருர்! எதற்கு ஆள் பிடிக்க, என்று கேட்கும்போது தான், சிரிப்பாய் வருகிறது, நமக்கு.

தேர்தலில் இன்னர் நிற்கிருர் அவர் என் கட்சியைச் சேர்ந்தவர், அவருக்கு நீங்களெல்லாம் ஓட்டுப்போட வேண்டும், அதை உங்களிடம் சொல்லி விட்டுப் போகவேவந்தேன், எனஊரிலுள்ள பெரிய மனிதர்கள் அல்லது கட்சித் தலைவர்கள் போவதும் சொல்வதும் உண்டு. கட்சித் தலைவரல்ல, இப்போது காமராசர்! ஆட்சித் தலைவர்!! ஆயினும் அர்த்தராத்திரி நாடினது ஏன் தெரியுமா? காங்கிரஸ் சார்பில் நிறுத்திவைக்க ஆள் பிடிக்கவாம்! ஆச்சரியப்படாதீர்கள், நண்பர்காள், உலகம் போற்றும் காங்கிரசுக் கட்சிக்குத் தான் ஆள் பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. காலையில் ஒரு ஆளைப் பிடித்தால் மாலைக்குள் மனம் மாறி, 'வேண்டாங்க! ஐயாயிரமோ, பத்தாயிரமோ தேர்தல் நிதிக்கு என் பங்கைக் கொடுத்துவிடுகிறேன். எனக்கு காங்கிரஸ் சீட் வேண்டாம்...' என்று உதறிவிடுகின்றனர். என்ன செய்வார் அவர்! இதற்காக யாருமே ஆளில்லை காங்கிரஸ் சார்பில் என்று சொல்லிவிட முடியுமோ? அதனால், ஒரு வகையாகப் பிடிபட்ட ஆட்களையும் இழுத்துக் கொண்டுபோய் பிடியிலிருந்து ஓடிவிடாமலிருப்பதற்காக, அவரே வந்து பிரச்சாரம் செய்யத் தயார் என்பதை செய்து காட்டியிருக்கிருர்!

நேரில், பிடித்த ஆளுடன், வரும் காமராசரிடம் கொஞ்சமாவது அனுசரணையாக நடந்து கொள்ளவேண்டாம் இந்த மக்கள்? ஐயா, 'வாழ்க' போடவேண்டாம்—'எங்கே வந்தீங்க' என்ருவது கேட்காமல் இருக்கக் கூடாதா!! ஆளுக்கொரு மாலை போட வேண்டாம், ஐந்தாறு பேர் சேர்ந்தாவது ஒரு மாலை போட்டிருக்கவேண்டாம்!

அட அதுதர்ன் வேண்டாம், 'மந்திரியய்யாவா? வாங்க!' வாங்க!' என்று இதமாக இரண்டு வார்த்தையாவது சொல்லக் கூடாதா!! பொல்லாத மக்கள், போன இடங்களில் என்னென்னமோ சொன்னர்களாம் 'கொஞ்சம் அதிருப்தி மனப்பான்மையுடன் மக்கள் நடந்து கொண்டார்கள், என்கிறது 'மெயில்' ஏடு. காங்கிரசுக் கட்சிக்கு 'சிம்பு' கட்டி நிறுத்த வரும் தேர்தலுக்கு நன்கொடை நல்கிடும் பெரிய பிரபுவின் ஏடு, இது! அதுவே, இந்தளவுக்கு உண்மையை உரைக்கிறதென்ருல், முதலமைச்சருக்கு மக்கள் கோடுத்த .'வரவேற்பின்' வகையினை வரைந்திட இயலுமோ!!

எலெக்ஷன் வருகிறதென்றதும் வந்துட்டாரய்யா பெரிய மனுஷன்!'

' ஆமாண்டீ!! ஓட்டுக்கா வந்திருக்கார் ஓட்டுக்கு. காட்டு! நாம்ப உட்கார்ந்திருக்க இடமும், குடிசையும் இருக்கிற அழகை...'

'ஐயா! மந்திரி! ஏங்க, உங்க ஆட்சியிலே இப்படிக் காற்றடிச்ச பலூன் மாதிரி விலைவாசி உப்பிக் கிட்டே போவுது...?'

'என்னமோ கோடி கோடியா கொட்டிச் செலவிடுறதா பேப்பர்லே வருதே. ஏங்க எங்க தெருக் கோடி எப்பவும்போலவே இன்னம் கிடக்குது...'

' இதைப்போல இன்னும் காரமும் கண்டனமும் கலந்த வகையில்!!

முதலமைச்சர் காதில் விழுந்ததோ, என்னவோ, அறியோம்.

(10ம் பக்கம் பார்க்க)

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 85 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னே. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 4. வி. பி. பி. செலவு 85. ந. பை

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு

(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1

திராவிடத்தைப் பிரித்திடுவோம்

(சா. கணேசன் எம். சி)

ஆண்ட இனம் திராவிடராம், அற்றை நாளில்
அடிமைகளாய்க் கொண்டு வந்தார் வடவர் தம்மை!
மீண்டவராம் கொடி கட்டி இமயந் தன்னில்
மேன்மை கொண்டு வாழ்ந்தனராம் மாற்ருர் போற்ற

நீண்ட அலைக் கடல்தன்னைத் தாண்டிச் சென்று
நெடுங்காலம் பெருவணிகம் நடத்தி வாழ்ந்தார்.
தீண்டாதாம் பகைவர்படை தென்ன கத்தை
திசைபலவே ஆண்டிருந்த நிலத்தார் தம்மை!

வீரரினம் உறங்கிட்ட வேளை இங்கே
வெளிநாட்டான் வெள்ளையனே உள்ளே வந்தான்;
பாரறிய வாணிபத்து வலையை வீசிப்
பக்குவமாய், தந்திரமாய் படைய மைத்தான்.

நேரற்ற வழியினிலே கொடியை ஏற்றி
நீள் இரண்டு நூற்ருண்டு ஆட்சி செய்து
சீரற்ற வடவரிடம் திருநாட் டைத்தான்
சேர்த்துவிட்டு வெள்ளையனே வீடுசென்ருன்.

அடிமைஇனம் ஆதிக்க வெறியைக் கொண்டு
அழிந்தழிந்து எழுகின்ற டில்லி தன்னில்
தடியரசை நிறுவியது, திட்டமென்று
தாரணிக்கு மூன்றைந்தை எடுத்துக் காட்டி

மடிப்பிச்சை ஏந்தியது: உலகை யாள்வோர்
மலைபோலக் குவித்திட்ட செல்வத்தாலே
படிப்படியாய் உயர்ந்ததடா வடக்கும் அங்கே;
பாலைவன மானதடா தெற்கோ இங்கே!

தேய்ந்திட்ட தாயகத்தைச் செழிக்கச் செய்ய
திருவிடத்தில் முன்னேற்றக் கழகம் கண்டோம்.
ஆய்ந்துநல்ல கொள்கைகளை அண்ணன் கூற
ஆற்றல் மிகு தம்பியர்கள் ஏற்றே

பாய்ந்தோடும் காட்டாற்றைப் போலே சென்று
பாழ்விலங்கை முறித்திடுவோம், உரிமைத் தீயால்
தீய்த்திடுவோம் வடபுலத்து ஆதிக்கத்தை;
திருவிடத்தைப் பிரித்திடுவோம்; எழிலைக் காண்போம்.

—ம்9 பக்கத்தொடர்ச்சி

இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டு, தன் நகர் வலத்தை முடித்துக்கொண்டு, திரும்பியிருக்கிருர்.

ஒவ்வொரு வீடும் ஏறிச்சென்று காங்கிரசின சாதனையை விளக்குவதென்பது, அவருடைய ஆசையாம்.

முதல் பயணமே, அவருக்கு முக்காடு போடும் விழாவாக மாறி விட்டதால், மறுநாள் முதல் இந்த ஒத்திகை, கைவிடப்பட்டிருக்கிறது!!

உலகெங்கும் புகழ் மணக்கும் நேரு பண்டிதர் உண்டு அவரிடம்! உலகையே விலைக்கு வாங்கும் சக்தி கொண்டதாக விளங்கும் பணநாதன உண்டு அவரிடம்! அதிகாரமுண்டு, ஆளம்பு உண்டு, எல்லாம் இருக்கிறது, நிரம்ப!—என்ருலும், கட்சிப் பெயரைக் கேட்டதுமே, மனமகிழ்ந்து ஓட்டுப் போடும் நிலையில் இல்லை மக்கள். அதனுலேயே வீட்டுக்கு வீடு சென்று, அதுவும் நள்ளிரவு நேரத்தில், பிடித்த ஆளுக்கு ஆள் பிடித்துக் கொடுக்க அலைந்து, அலுத்து 'வேண்டாம் இந்தவம்பு' என்று மறுநாளே அந்த முயற்சியைக் கைவிட்டிருக்கிருர்—'கப்சிப்' என்று பேசாமலிருந்திருக்கிருர்!!

காங்கிரசைக் காப்பாற்ற காமராசர் நினைக்கும் கடைசி ஆயுதம் தன்னுடைய செல்வாக்கு!

காங்கிரசின் செல்வாக்கேக் காற்றிலகப்பட்ட பஞ்சுபோல் பறக்கும்போது, காமராஜருக்கா மக்கள் மயங்கிவிடப் போகிருர்கள்!!

நல்லவேளை, இந்தளவுக்காவது அவரைத் தாய்மார்களும் பெரியவர்களும், விட்டார்களே.

(8—ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்து விட்டுக் கதவைச் சாத்தி விட்டார்கள்! கலீர் கலீரெனச் சப்தம் கேட்டது. நான் திறப்பேனு கண்களை? காதலைக் கலக்கிய காதகி, கதற வேண்டாம்! கட்டிலில் பேசாமல் படுத்திருந்தேன். கொஞ்ச நேரம் ஆகியிருக்கும். வந்தவள் என்ன செய்கிருள் என்று பார்க்கவேண்டுமென்று என் ஆசை தூண்டியது பாதி விழித்தபடி பார்த்தேன்.

கையில் பாலுடன்ஒருமூலையில் தலைகுனிந்தபடி நின்று கொண்டிருந்தாள். நிற்கட்டும்! நிற்கட்டும்! என்று மறுபடியும்கண்களைமூடிக் கொண்டேன்.

எவ்வளவு நேரம்தான் அப்படி நிற்பாள்? அருகில் வராமலா போவாள்? அப்போதல்லவாநான் யாரென்று தெரியப்போகிறது?

அரைமணிக்கு மேலாகியிருக்கும்போலிருக்கிறதேஇன்னுமாநிற்பாள்-ஊம்! கண்களை திறந்தேன். அவள்...அதே இடத்தில்...அதே நிலையில். என் இருதயத்தின் ஒரு மூலையிலிருந்து 'ஐயோ, பாவம்!' என்கிற அனுதாபம் தலைநீட்டியது. செச்சே! நான் அனுதாபம் காட்டலாமா? இதே அனுதாபம் அன்பாகமாறிவிட்டால்! ரமாவின் மீது நான் கொண்ட காதலுக்கா துரோகம் செய்வது!

லைலாவுக்காகப் பைத்தியமான மஜ்னு—பார்வதிக்காக உயிரை விட்ட தேவதாஸ்— ஜூலியட் ரோமியோ—செச்சே! நான் யார்? ஒரு நவயுக வாலிபன் இவ்வளவு சீக்கிரம் பிடிவாதத்தை தளரவிடலாமா? கண்ணை மூடிக் கொண்டேன்!

உண்மையாக வாழ்வதைவிடப் பொய்யாக வாழ்வது ஒரு பெரிய போர்க்களம், என் மனம் ஒரு நிலையில் இல்லை. ஒருவேளை, அவள் நெருங்கி வந்து, 'அத்தான்!' 'இந்தாங்க பால்!' என்று சொல்லியிருந்தால்கூட நன்ருகயிருந்திருக்கும். எதுவுமே பேசாமல் நின்ற இடத்தைவிட்டு நகராமல் அப்படியே அல்லவா நிற்கிருள்? ஏன் அப்படி நிற்க வேண்டும்? என் மனைவி என்பதாலா! செச்சே—என்ன குற்றம் அவள் எனக்குச் செய்தாள்? ரமாவைவிட இளமையாக—ஏன், அழகாகக்கூட—இவள் இருக்கிருளே! செச்சே, என்ன மனம் எனக்கு? அவள் நின்ருல் நிற்கட்டும்—அழகாய் இருந்தால் எனக்கென்ன! என்னைக் கேட்டுக் கொண்டா அவள் மனைவியானுள்!! இப்படியே நிற்கட்டும். பொழுது விடியும்வரை நிற்கட்டும்.

* * *

கல்லூரிக் காம்பவுண்டுக்குள் நுழைந்துவிட்டேன். பரீட்சையிருப்பதாகச் சாக்குச் சொல்லிக் கொண்டு ஊரைவிட்டுக் கிளம்பி ஓடிவந்து விட்டேன். என்ருலும் என் மனம் ஒரு நிலையில்லை. இரவு பூராவும் இருந்த இடத்தைவிட்டு நகராமல் கையிலிருந்த பால்டம்ளரை விடாமல், குனிந்த தலைநிமிராமல்...செச்செ! என்ன மனம் இது—

வைரம் பாய்ந்ததாக இருக்க வேண்டாம் வாலிப உள்ளம்? இதற்கெல்லாம் கரைந்துவிடலாமோ?...என்ன இருந்தாலும் நான் ஊருக்குக் கிளம்புகிறேன் என்றதும் என் பெட்டி படுக்கைகளை...செச்சே! கொஞ்சங்கூட உறுதியே யில்லையே இந்த மனதுக்கு?

வண்டியிலேறியதும் கதவோரம் நின்று நான் பார்ப்பேனு என்று அவள் காத்திருந்த காட்சி... வேறென்னசெய்வாள்? கசையடி கொடுத்தாளல்லவா காதலுக்கு! அவள் இப்படியெல்லாம் காத்திருந்து கண்ணீர்விட வேண்டியது தான்...

அதோ ரமா! எனக்குக் கலியாணமாகி விட்டதென்று அறிந்தால் அவள் என்ன நினைப்பாள்? அந்த இளந்தளிரின்மனம் என்ன பாடுபடும்? செச்சே! நான் துரோகி! துரோகி!! என்னை நோக்கித்தான் வருகிருள்...

கையில் ஏதோ கடிதம் போலிருக்கிறதே! என்னிடம் கொடுக்க வன்ருே எடுத்துக்கொண்டு வருகிருள்? என்ன செய்வேன்! பார்வையே என்னைக் கொல்லுகிறதே ...எப்போதுமில்லாத அந்தப் புன்சிரிப்பு...நான் கொடுத்து வைக்காதவன்...அவசரக்காரன் ... என் உணர்ச்சியெல்லாம் பீறிட்டுக் கொண்டு வருகிறதே...

"ரமா...! ரமா!!"

"என்ன மிஸ்டர் இளங்கோ..."

இந்தாங்க? அவசியம் நீங்கள் வந்தாக வேண்டும்..."

என்ன இது? ஏதோ திருமணப் பத்திரிகை போலிருக்கிறது! செல்வி ரமாவுக்கும்—செல்வன் ரவி எம். பி. பி. எஸ்-சுக்கும்... செ! நான் எவ்வளவு பைத்தியக்காரன்? இந்த ரமாவுக்காக என் உள்ளம் என்னென்ன எண்ணிற்று!! ரமாவுடன் நெருங்கிப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்ததை வைத்து நான்?...செ!...என்னைப் போன்ற வாலிபர்கள் காதலைப் பற்றி எவ்வளவு சீக்கிரம் முடிவுக்கு வந்து விடுகிருேம் ...எது காதல்? என்னை முதல் நாள் வரையில் கண்டிராமலிருந்தும்கூட எனக்காக ஒரு இரவு முழுவதும் நின்று கொண்டேயிருந்தாளே காந்தா அதற்கு என்ன பெயர்? என் ஒருபார்வைக்காக ஏங்கி நின்ருளே அதற்கு என்னபெயர்? ஆம்! அதுதான் காதல்!

ஆணும் பெண்ணும் அறியாமலே தனக்குள் எண்ணியெண்ணிக் கற்பனைகளைமுடைவதல்ல காதல்; அது கானல். இருவரும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஆரம்பிக்கிருர்களே, அப்போது முகிழ்ப்பதுதான் காதல்! அதுதான் காதல்!! கலியாணத்துக்கு முன்புதான் காதல் மலருமென்பது கதைகளில். வாழ்க்கையில் திருமணத்துக்குப்பின்பே உண்மையான காதல் மலர்கிறது. அதுதான் உயர்ந்த காதல்; உலகம் போற்றும் காதல்.

காந்தாவைப் போய் பார்க்கும் வரையில் என்மனம் ஒருநிலைப்படாது...இதோ புறப்படுகிறேன் ...என் மனைவியை அடைகிறேன்...

மலேயா சிரியா

ஒரு புதிய தேசம் உருவாக்கப்பட இருக்கிறது! அதன் பெயர் "மலேயா சியா."

மலேயாவிலுள்ள குறுநில மன்னர்களின் நாடுகளேயும், சிங்கப்பூர், வடபோர்னியா, சாரவாக், ப்ருனி முதலியவைகளைச் சேர்த்து, ஒரே தேசமாக இணைப்பதென்றும் அதற்கு மலேயா சியா என்று பெயரிடுவதென்றும் ஒரு முயற்சி பழுக்கும் நிலையிலிருக்கிறது.

இதற்கான ஆலோசனைகளை பிரிட்டிஷ் அமைச்சர்களுடன் மலேயா முதல் அமைச்சரான துங்கு அப்துர் ரகிமான் நடத்தி வருகிறார்.

"காதுக்கு இனிப்புத்தான்! மலேயாசியா! பெரிய நாடு! ஒன்றுயிருக்கலாம்!— என்றெல்லாம் செல்வது? இந்த அவசியம் ஏன் வந்தது? எங்கள் சிங்கப்பூரை 12வது நாடாக சேர்த்து உருவாக்குவதால் எங்களுக்கென்ன இலாபம்? ஏதோ விருப்பம்போல் உல்லாசமாக வாழும் சுதந்திரங்களைப் பெற்றிருக்கும் நாங்கள் ஏன் அந்தச் சுதந்திரத்தைக கட்டுப்படுத்திக்கொண்டு உங்களுடன் இணைய வேண்டும்? இதனால் எங்களுக்கு என்ன நன்மை!" என்று மலேயாசியா யோசனையை எதிர்த்திருக்கிறார், சோஷியலிஸ்டு முன்னணித் தலைவரான டாக்டா லீ.

இந்த கிழமை சிங்கப்பூர் சட்டமன்றத்தில டாக்டர் லீ, இந்தப் பிரச்னையின்மீது 10மணி நேரம் பேசினாராம்!!

வேண்டுமானால் ஒரு பங்காளிபோல நாமும்ஒருபெடரல் கூட்டுக்குச் சம்மதிக்கலாமே ஒழிய இணைப்பதென்பது நல்லதல்ல—என்று வாதிட்டிருக்கிறார்.

இவர் எதிர்ப்புத் தெரிவித்தாலும், சர்ககார் கட்சி இணைப்பை விரும்புவதால் அத்தீர்மானமே நிறைவேறும்,

ஆட்சிச் சக்கரம் ஒருமுறை கைக்குவந்தாலே அதை விடப் பெரிய தேசத்தை ஆளவேண்டும் என்கிற ஆசை வந்துவிடும் போலிருக்றது!!

ஆசைக்காக ஒன்றுசேர்ந்து விட்டால் போதுமா— பிற்பாடு அவதியிருக்குமென்பது, அரும்பிலேயே தெரிகிறதே, டாக்டர் லீ பேச்சைப் படிக்கும்பொழுது.

(6ம் பக்க தொடர்ச்சி)

தி.மு.க.தேர்தல்சிறப்பு மாநாடு நடக்கவிருக்கிறது. மாநாடுஎன்றாலே முகம் மலர்வீர் என்பது அறியாதவனல்ல யான்! ஆயினும் உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்—வருக! வருக! இப்போது முதலே, கோவை வருவதற்குத் தயாராகிக் கொள்க!

கோவை மாநாடு

—நம் கொள்கை முரசொலிக்க!
—நம் உரிமையை உரைக்க !
—சக்தியைக் காட்ட!
—சதியாளர் மிரள!
—ஆதிக்கம் பாடம் பெற!

ஆகவே,

எல்லோரும் வாருங்கள்! இரயிலில் அல்ல; அது சாதாரணம். பஸ்கள் ஏற்பாடு செய்து ஊரிலிருந்தும் வாருங்கள்!! தேர்தல் பிரச்சாரமாகவும் அமையும்; சிறப்பாகவும் இருக்கும்!!

—0— —0—

(7—ம் பக்கத் தொடர்ச்சி)

வெந்த வீட்டில் இழுத்தது ஆதாயம் என்று கருதி நடக்கும் தன்மை, வளர்ந்து விட்டது, இந்தப் பதவிகளை வைத்து எப்படி ஒரு சாதாரண கிளார்க், ஹெட் கிளார்க்காகி பிறகு தாசில்தாராக விரும்புவானோ அதற்கொரு மார்க்கமாகும் என்று கருதுகிற மனோபாவம் ஏற்பட்டு விட்டது.

இந்த மனோபாவம் தவறு—மந்திரிகளாக வருவோர் மக்களுக்காகப் பாடுபட்டுத்தான் வருகிறார்கள்—அவர்கள் எளிய வாழ்க்கையும் பரிபூரண தேசத் தொண்டும் செய்ய வேண்டும்—என்று உணர்த்த விரும்பியது ஒரே ஒரு மந்திரிசபைதான்! கேரளத்திலிருந்த காங்கிரசல்லாத மந்திரி சபைதான் அது!!

ஏனைய மாநிலங்களிலுள்ள அமைச்சர்கள் 1500சம்பளத்தை விடமாட்டோம் என்று குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தபோது மாதம் ரூ. 500 சம்பளம் போதும் என்றார்கள் இவர்கள்.

விழா! கல்நாட்டு! என்றால்தான் மக்களைப் பார்க்கப்போவது என்றிருந்த நிலையை மாற்றி எதற்கும் எப்போதும் மக்களைப்பார்க்கலாம் அதுதான் நமது பணி என்று பொறுப்புணர்ந்து பாடுபட்டார்கள், கேரள கம்யூனிஸ்டுகள்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரே ஒரு இடத்தில் மட்டுமே காங்கிரசல்லாத மந்திரி சபை நடக்கிறது—அது அனைவருக்கும் ஒரு உதாரணமாக விளங்க வேண்டும்—என்பதால், கட்டுப்பாடுகளைத் தமக்குத்தாமே விதித்துக்கொண்டு, திறமையோடு நடந்து காட்டினார்கள்!!

சென்னை மாநகராட்சி காங்கிரசு ஆதிக்கத்திலிருந்தபலனை இழந்ததற்கும், தி. மு. க. நுழைந்த பிறகு இருப்பதற்குமுள்ள உதாரணமே சொல்லும்—காங்கிரசல்லாதவாகள் எப்படி நடப்பார்கள் என்பதற்கு! கார்ப்பரேஷனைக் கடனாளியாக்கிவிட்டுப் போயிருந்தது, காங்கிரஸ். கடனைச் சரிகட்டி, மிச்சம் வருகிற அளவுக்கு பட்ஜட் போட்டுப் படாதபாடு பட்டிருக்கிறது தி. மு. க. காங்கிரஸ் மேயர்களைக் காண்பதே ஆபூர்வம்! நம்முடைய மேயர்க[illegible]யெல்லாம் சுலபம்!! கிடைத்த பதவியைக் கொண்டு நம்மாலான நன்மைகளையெல்லாம் செய்ய வேண்டும் என்று படாதபாடு படுகிறார்கள், தி. மு. கவினர். காங்கி[illegible] இப்படியா செய்தது! இரண்டு 'காலத்தை'யும் ஒப்பிட்டாலே நன்கு புரியும்!!

சனநாயத்தில் ஒரே கட்சியை ஆட்சியில் நீடிக்கவிட்டால் ஊழலும், லஞ்சமும்தான் பெருகும்.

என்ன ஆனாலும் நம்கட்சிதான் பரம்பரை பரம்பரையாக ஆளவேண்டிய கட்சி—அந்தக் கட்சியிலும் நாம்தான் மந்திரிகளாக வேயிருப்போம்—என்கிற நிலை வளருமானால் ஆபத்து, பேசாமல் ஜனநாயகம் என்கிற சொல்லை எடுத்தெறிந்துவிட்டு ஆண்டாண்டு காலத்துக்கும் காமராசர்தான் முதல் மந்திரி, பக்தவத்சலம்தான் மந்திரி, அவர்களுக்குப் பிடித்தவர்களைப் பிற மந்திரிகளாக போட்டுக் கொள்வார்கள், இதுதான் இந்த நாட்டின் தலையெழுத்து என்று சொல்லிவிடலாம்! அந்தக் காலத்தில் உண்மையான ராஜாக்கள். பரம்பரைப் பாத்தியதையுடன் ஆண்டார்கள். இப்போது ஜனநாயகப் போர்வையில் காமராசர் ஆள்கிறார் என்று இருந்துவிடலாம்!

இப்படியொரு புதிய ராஜ பரம்பரை உலாவுவதை ஒழிக்கவிரும்பும் காங்கிரஸ் வாலிபர்கள் 'குஜரத்'போலக் குமுறி விட்டால் போதாது. உண்மையான ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்று விரும்பினால், ஒருதடவையாவது எதிர்கட்சிகள் ஆட்சிக்கு வர மனப்பூர்வமாக அனுமதிக்க வேண்டும். இப்படிச் செய்வது பெரிய தியாகமாகும்! அப்படியொரு தியாகத்தைச் செய்யக் கூடிய ஆள் யாரிருக்கிறார்கள் காங்கிரஸில்— அவர்கள் சண்டை போடுவதே முன்பிருந்தோர் அனுபவிந்தவைகளை நாங்களும் அனுபவிக்க வேண்டும் என்கிற ஆசையில்தானே என்பீர்களானால் —: காங்கிரஸ் வேட்டைக்காரர்களுக்குச் சரியான பாடம் புகட்டவேண்டியபொறுப்பு பொதுமக்களுடையதாகும்! பொதுமக்களின் மனதையும் செயலையும் உருவாக்கும் அரசியல் தொண்டர்களுடைய கடமையாகும்!!

வரும் தேர்தலில் அத்தகைய பாடத்தைப் புகட்ட வேண்டும் தமிழ்நாடு.

—0—

உங்களது தேவைக்கு

V.G.பன்னீர்தாஸ்&கோ.

சைதாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் எதிரில்
போன்: 88084 சென்னை-15

பிராஞ்ச:
மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் எதிரில்
27, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-17



சுலபமானது
தவணைகளில் விற்குவது

[சென்னை வாசிகளுக்கு மட்டும்]
மர்பி, நேஷனல்-எக்கோ, ஜி. இ. ஸி. ரேடியோக்கள் மற்றும்
சைக்கிள், கைக்கடிகாரம், வால் கிளாக, மின்சார விசிறி, தையல் மிஷின் முதலியன

• எளிதில் வாங்க விசேஷ சலுகைகள்
• விரும்பும் மாடல்களில் உத்திரவாதத்துடன் கிடைக்கும்

murphy radio
Delights the home!

கேள்வி பதில்

கே: சம்பத் சில தினங்களுக்கு முன்பு இங்குபேசும்போது நான் வாங்கிய பணத்தைத் தலைமைக் கழகத்தில் சேர்த்து விட்டேன் என்றார். இது உண்மையா? மேலும் கழகத்துக்காகச் சொத்தில் பெரும்பகுதியை விற்றுவிட்டதாகவும் தன்னை விடப் பொதுநலத்திற்காக யாரும் சொந்தப் பணத்தைச் செலவு செய்யவில்லை என்றும் கூறினார். தகுந்த பதில் தருக!

இரா தங்கவேலன்,
புலவன்காடு,
ஒரத்தநாடு வட்டம்

பதில்: தன் வசமிருந்த பணத்தைத் தலைமைக் கழகத்தில் சேர்த்துவிட்டதாக சம்பத் சொன்னது அப்பட்டமான பொய்! கழகத்துக்காகத் தன் சொத்தில் பெரும் பகுதியை விற்றார் என்றால், அந்தப் பணத்தைக்கொண்டு அவர் எத்தனை புது கழகங்களை ஆரம்பித்தார், எத்தனை ஏழைத் தொண்டர்களை ஆதரித்தார், எத்தனை ஊருக்குப் பணம் வாங்காமல் பிரச்சாரத்துக்குப் போய் வந்தார்?—என்று கேட்டால், உண்மை விளங்கும். கழகத்தில் இல்லாமலிருந்தால் இன்னும் பெரும்பகுதியைத்தான் அவர் விற்றிருப்பார்! கழகம் அவருடைய செலவுகளையும், ஒய்வு நேரங்களையும், ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியது என்றே கூற வேண்டும். புதிய கட்சி துவங்கிய பிறகுஈரோட்டு வள்ளல் அவர்கள் எவ்வளவு சொத்தை பொதுநலனுக்காக விற்றிருக்கிறார்? தன் விருப்பப்படிக்காரியங்களைச்செய்துவிட்டு யார் தலையிலாவது போடுவது, பூர்ஷ்வா, சுபாவம்! தன்னைப் பிறர் குற்றம் சொல்லக்கூடாது என்பதற்காகமற்றையோர்மீது அபாண்டங்களை அள்ளிவீசுவது அய்யா அவர்களின் அரசியல்!! இரண்டையும் சரிவரப் பெற்ற சம்பத் அவர்களா கழகத்துக்காகத் தன் காசைக் கறைத்திருப்பார்? கூடப்பழகும் அவரது நண்பர்களையும் கவிஞர் கண்ணதாசனையும் கேட்டால் புரியும்!!

* * *

கே: மதுரையில் நடந்த தி. மு. க. மாநாட்டின் நுழைவு வாசலிலிருந்த திராவிடத் தாயின் புகைப்படம் உங்களிடம் உண்டா?

கே லோகநாதன்
வாணி,
இராமநாதபுரம் மாவட்டம்

ப: மதுரைமாநாட்டையொட்டி வந்த 'அறப்போர்' மாநாட்டு மலரில்இருந்ததே!

கே: சிந்துவெளி நாகரீகம் 'ஆரிய நாகரீகம்! என ஏ. கே. கோபாலன், மனுதர்ம சாஸ்திரம்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளாரே? தங்கள் எண்ணம்?

பால முனுசாமி,
புதுவை.

ப: ஆதாரங்கள்கிடையாதுஅவர் கூற்றுக்கு.

* * *

கே: ஒரு பையன் அடிக்கடி'சாமி வந்துவிட்டது' என்று ஆடுகிறான். தான் முருகன் என்று சொல்கிறான். கற்பூரத்தை எரித்து அவன் வாய்லிட்டபின் அமைதி அடைகிறான். அவனைக் கேட்டால் தனக்கு எதுவும் ஞாபகம் இல்லை என்றும் கூறுகிறான். இதெல்லாம் பைத்தியக் காரத்தனம் என்றால் பணிபுரியும் படித்த ஆசிரிய அன்பர்களோ என்னை ஏளனமாகப் பார்ப்பதோடு முட்டாள் எனவும் கருதுகிறார்கள். இதற்குத் தாங்கள்தான் சரியான விளக்கம்தர வேண்டும்...

கடலூரான்,
க. உ. பள்ளி,
கல்லக்குறிச்சி

ப: சாமியாடுதல் என்பது நரம்புத் தளர்ச்சியின் விளைவாக : உண்டாவதாகும். சகல விதமான நினைப்புகளையும், உணர்ச்சிகளையும்சேகரம்செய்து வைத்திருக்கும் பெட்டி போன்றது மூளை. அந்த மூளையின் உதவியாலேயேதான் மனிதன் ஒவ்வொருவரும் கோபம், ஆனந்தம் இன்பம், வேதனைபோன்ற சகல விதமானஉணர்வுகளையும் பெறுகிறார்கள. இந்த உணர்ச்சிகளைச் சேகரிப்பதும், வெளியிடுவதும் நரம்புகள்தான். இப்படிப்பட்ட எந்தவித உணர்ச்சியுமில்லாமல் விருப்பம்போல் சிரிப்பவன்—பேசுகிறவன்-பைத்தியக்காரன்! பைத்தியம் வருவதற்கு மூலகாரணம் நரம்புகள் நிலையற்றுப் போய், மூளை குழம்பிவிடுவதுதான். சிலர் சங்கீதம் என்றால் மிகவும் ரசிப்பர்! காரணம் அதற்கேற்ற நரம்பு. அப்பயிற்சியையும், சக்தியையும் அதிகமாகப் பெற்றதேயாகும், சிலருக்குத் திடீரெனக் கோபம் வரும். அதற்கும் காரணம், அந்த வேலையைக் கவனிக்கும் நரம்பு தளர்ச்சியடைவதுதான்!

சாமியாடுதலுக்கும் காரணம் எளிதில் நரம்புகள் உணர்ச்சிவசமாவதே. 'முருகன்' எனச் சொல்லக்காரணம் அந்தநினைவு அதிகமாயிருப்பதே. இது போன்ற சாமியாடுதல் இங்கு மட்டுமல்ல, எங்குமுண்டு! ஆபிரிகாவிலுள்ள ஒரு நீக்ரோ, "நான்முருகன்! எனக்குப்பழனி மலை வாசம்!!" என்றால் நாம் முருகன் திருவருளைப்பற்றி ஆச்சரியப்படலாம், கற்பூரத்தை யாரும் விழுங்கலாம்! நடிகர் சந்திரபாபு ஒருபடத்திலே விழுங்கிக் காட்டினார்! ஒருமுறை-இருமுறையல்ல, படபிடிப்புசரியாக விழும்வரைவிழுங்கினார்நாக்கில் சூடேறுவதற்குள் விழுங்குங்கள் வெறும் நெருப்பாகத் தொண்டைக்குள் போகாது; அணைந்துதான் போகும்...இதைப்பற்றி நிறைய எழுதலாம், ஏராளமான நூல்களும் உண்டு. ஆசிரியர்களுக்கு 'இங்கர்சால்' நூல்களைச் சிபார்சு செய்யுங்கள்.

அரசியல்வாதி

-மாசிலாமணி -

* * *

ஒரு பெரிய டாக்டர்; ஒரு பெரிய அரசியல்வாதி. டாக்டர் பணக்காரர்! அரசியல்வாதி ஏழை!! பணத்துக்கு அந்த ஊரார் மதிப்பளிக்கவில்லை; ஏழையாயிருந்தாலும் அரசியல்வாதியையேக் கொண்டாடினர்!

'நமோ கெட்டிக்கார டாக்டர்! நம் வருமானமோ—ஏராளம்!! பிணிகளைத் தீர்க்கும் என்னைப் பெரியவன் என்று சொல்ல மறுக்கிறார்களே மக்கள்! என்ன காரணம்?' என்று வேதனைப்படுவார் டாக்டர்.

'ஏழையாயிருந்தாலும் எப்படிப்பட்ட குணவான் தெரியுமா! அவருடன் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தாலே மனப்பிணி யெல்லாம் போய்விடுகிறது...' என்று மக்கள் அரசியல்வாதியைப் பற்றி பேசிக்கொள்வார்கள்,

மக்கள்மீது கோபங் கொள்ளவேண்டிய டாக்டருக்கோ அரசியல்வாதி மேல் கோபங் கோபமாக வந்தது! காணுமலே தன்னுடைய கடுமையான விரோதி யென்று எண்ணினார்!!

அரசியல்வாதியோ இது எதையும் மனதால்கூட எண்ணியதில்லை. ஏது நேரம் அவனுக்கு? எல்லோரையும் தன்னைப்போலவே எண்ணிடும் மனப் பக்குவம் பெற்றவன் அவன்! அதனால் எவ்வித சலனமுப் இல்லாமலிருந்தான்.

எப்படி மக்களை மயக்கலாம்?—என்று யோசித்த டாக்டர், அதற்காக பற்பல காரியங்களைச் செய்தார்! வருகிற நோயாளிகளிடமெல்லாம் உண்டியல் வைத்து வசூலித்து, சனிக்கிழமை தோறும் வீட்டில் சத்கதாகர்லட்சேபங்களை ஏற்பாடு செய்தார். 'இது ஒரு பிசினஸ டிரிக்! விளப்பரச் சாதனமாகப் பக்திப் பயன்படுறது!!' என்றுதான் மக்கள் பேசினார்கள்.

* * *

ஒருநாள்—

ஆற்றைக் கடந்து அடுத்த ஊருக்குப்போக வேண்டியிருந்தது, இருவருக்கும்.

ஒரே ஒரு படகு!

முன்னமேயே வந்ததால், அரசியல்வாதி. ஏறியிருந்தான். டாக்டர் திகைத்தார்! அரசியல்வாதி—அன்போடு அவரை அழைத்தான்.

எதிரியின் அன்பைப் பெற அவருக்கு அருசையாயிருந்தாலும் வேறு வழியில்லாததால் ஏறிக்கொண்டார்!

படகு, நடு ஆற்றில் சென்றது. அரசியல்வாதியின் பக்கம் திருப்பவுமில்லை, டாக்டர்.

படகோட்டி, ஒட்டிக் கொண்டிருந்தான்.

ஒருபுயல்!—படகு, இப்படியும் அப்படியும் ஆடிக்கொண்டிருந்தது.

எப்போது, கவிழ்ந்துவிடுமோ என்கிற அச்சம் வந்துவிட்டது படகோட்டிக்கு.

'இரண்டு பேரில் யாராவது ஒருவரைத்தான் படகு தாங்கும்!' என்று கண்டிப்பாகச் சொன்னான்.

நட்டாறு! யாராவது ஒருவர் குதிக்கவேண்டும். குதித்தால் அவ்வளவுதான்! சாவு தவிர வேறு வழியில்லை!!

டாக்டர் பதில்பேசவில்லை. அரசியல்வாதி யோசித்தான்!

டாக்டரின் முகத்தைப் பார்த்தான்—

டாகடர் முகத்தைத் திருப்பிக்கொண்டார்!

'தடால்' என்று பேரோசை...

படகில் டாக்டர் மட்டுமே இருந்தார்...

* * *

பிணம் கரையோரம் கிடந்தது—

இருட்டில் திரும்பிய டாக்டர் பிணத்தின்மீது தற்செயலாகக் கால் வைத்தார்!

நிலவொளியில் அரசியல்வாதியின் பிணம் சிரித்தபடியே யிருப்பது போலிருந்தது...

வீட்டுக்கு வந்தார்! அதே நினைவு!!

மறுநாள் காலை...

டாக்டரும் அரசியல்வாதியாகிவிட்டார்...

'எதையாவது கொடுப்பதில்தான் இன்பம் இருக்கிறது. அந்த இன்பத்துடன் வாழ்ந்து, இன்பத்தோடேயே செத்தான். நான் செத்திருக்கலாம்: நஷ்டமில்லை. அவன் செத்ததால் மக்களுக்கு ஒரு நல்ல தொண்டன் வேண்டும். என் கடன் அதுவே'—என்றார் டாக்டர்.

அவர் எதிரே எப்போதும் அரசியல்வாதியின் படம் இருந்தது!!

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு ,டிரஸ்ட்புரம்,சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6